



மெல்லத் தமிழ் இனி...

# விருந்து

விலை ரூ.80.00

**ஈழத்தின் கிழக்கிலிருந்து இரு மாதங்களுக்கொருமுறை வெளிவரும் பல்சுவை விருந்து**


ஆசிரியர் : அகரம். செ.துஜியந்தன்


முகவரி : மருதநாயகம் வீதி, பாண்டிருப்பு -02
கல்முனை
மின்னஞ்சல் : sthujiyanthan@yahoo.com
தொலைபேசி : 0094 75 430 330 9


காலம் : தை - மாசி 2017
வெளியீடு : அகரம் சமூக அமையம்
வடிவமைப்பு / அட்டைப்படம் : சபா.மதன்


**ஆக்கங்களுக்கு ஆக்கியவர்களே பொறுப்பு (ஆ-ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லத் தமிழ் இனி...

# விருந்து




## விருந்தின் உள்ளே....


03...தமிழருக்கு

04...புதுவிருந்து

04...வெறுமையின் சுமை

05...மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று பாரதியார் சொன்னாரா?

07...வாருங்கள் எம்மைப் பாருங்கள்

08...கற்புக்கடம் பூண்ட பொற்புடைத்தேவி கண்ணகி

10...மானுடமீட்சி

11...நான் சீரழிய மாட்டேன்

17...ஆறாவது தீக்குச்சி

17...குருட்டுக் கடவுள்கள்

18...கோபத்தைக் கையாளுதல்

19...காத்திருக்கிறாள் விடியலுக்காக

18...மூச்சுக்காற்று

20...மாநிழல்

23...காட்டில் புதைக்கப்பட்ட கவிதை

24...சூழலும் மனிதனும்

25... ஒளிப்படக்கலை

27...ஆன்மீகப்பெருவாழ்வு மேலோங்கும் நிச்சயமே

29...பிரபஞ்சத்தின் வீதிக்காவலன் – ஒ...

31...ஒரு மொழியின் ஏக்கம்

32...அகரத்தின் உச்சரிப்புகள்

36...ஈழக் கூத்தரங்கில் எம்மவர்களின் சிந்தனைகள்


உங்கள் எண்ணங்களை எங்கள் வண்ணங்களாய்த் தாங்கிவரும் விருந்தின் தடையற்ற பயணத்திதிற்கு உங்களால் முடிந்த ஆக்கங்களையும் ஆதரவையும் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

– ஆசிரியர் –

அனைவருக்கும் மலர்ந்திருக்கும் இப் புதிய வருடம் உங்கள் வாழ்வில் நலம் பல தந்து வளம் பல பெருகிட புதுவருட மற்றும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

கல்முனைப் பிரதேசத்தில் இலக்கிய சஞ்சிகை ஒன்று வெளியிட வேண்டுமென்று நீண்ட நாட்களாக எனக்குள் ஒரு கனவு. அக்கனவு அன்று மணிப்புறாவாக நிறைவேறியது. இன்று "விருந்து" எனும் பெயரில் அது தொடர்கிறது. இதற்கு எழுத்தாள நண்பர்களும் இலக்கிய ஆர்வலர்களும் ஆதரவு தந்துகொண்டே இருக்கின்றார்கள். அந்த நம்பிக்கையினால் தமிழ் விருந்தை தொடர்ந்து வழங்கமுடியும் என்ற மகிழ்வுடன் உங்கள் முன் நிற்கின்றேன்.

விருந்து என்றால் புதியதுபடைத்து நேச மனப்பான்மையோடும் முகம் மலர்ந்து உபசரித்தும் உண்மை பேசியும் அன்புடன் வழங்கி மகிழ்வதாகும். இவ் விருந்தை இருமாதங்களுக்கு ஒரு முறை உங்களுக்குத் தர இருக்கிறேன். புதிய ஆக்கங்களையும் சிறந்த இலக்கியப் படைப்புக்களையும் இனங்கண்டு அதனை வளர்க்கவும் விருந்து வழிசமைக்கும் என எண்ணுகின்றேன்.

இவ்விருந்தின் சுவையை அதிகரிக்க சகல இலக்கிய ஆர்வலர்களும் அபிமானிகளும் ஆதரவு தந்து உறுதுணை புரியுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இவ் விருந்து நமது மண்ணில் மகிழ்ச்சியையும் நல்விளைவுகளையும் வழங்கும் என்று நம்புங்கள். விருந்துக்கு நீங்கள் வரவேற்பு வழங்குவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் அடுத்த இதழில் சந்திக்கும் வரை.

அன்புடன்
ஆசிரியர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தமிழருக்கு..

## மகாகவி பாரதியார்

தமிழா தெய்வத்தை நம்பு பயப்பிடாதே. உனக்கு நல்லகாலம் வருகின்றது. உனது சாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்துவான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது சாதியிலே தேவர்கள் மனிதர்களாக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாக துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும்பார் ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப்பார்.

நமது நாட்டு இஸ்திரீகளிலே பலர் சக்திக் கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி, நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன. தமிழா பயப்பிடாதே ஊர் தோறும் தமிழ் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

சாதி வேற்றுமைகளை வளர்க்காதே, "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்து தமிழர் மனைவியை வாழ்க்கைத் துணை என்றார். ஆத்மாவும், சக்தியும் ஒன்று. ஆணும்,பெண்ணும் சமம். வேதங்களை நம்ப, அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.

தமிழா! உனது வேலைகள் அனைத்திலுமே பெய்க்கதைகள் மிதமிஞ்சிவிட்டன. உனது மதக்கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடம் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், புதுமை இருக்கவேண்டும். உண்மையிருக்கவேண்டும், நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது, பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது, பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்கவேண்டும்.

எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப்பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர்! உண்மை சாத்திரங்களுக்கெல்லாம் வேர்! உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி! உண்மை பரமாத்மாவின் கண்ணாடி! ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படி செய்!

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.

-ஆபிரகாம் லிங்கன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது விருந்து

-மு. சடாட்சரன்-

கார்த்திகை பூத்ததும்
கடும் மழையும் கொட்டுது!
அரிசியும் ஆனைவிலை ஏறிற்று !
சாக்கு விரித்துப் பலகையில்
சால்வையால் போர்த்திருந்து பார்க்கின்றேன்!

பள்ளிக் கூடம் நோக்கிப் பறக்கும்
அன்னப் பட்சிகள்
வெள்ளம் பெருகி ஓடு தென்று
வீட்டுக்குள் கூடி விட்டன.

கிழங்கவிக்கவும் விறகில்லை!
வாங்கி வரவும் வழியில்லை!

கடலும் உரத்துக் கத்துகிறது.
காற்றும் பலமாய் அடிக்கிறது
கடைகளிலும் சனக் கூட்டம்!
கைக் கனப்பும் சுருங்கிற்று

பூகம்பம் வெடித்துச் சுனாமி வருகுமோ?
பாதுகாப்பான இடம் தேடிப்
பாய்ந்தோட நேருமோ?
ஒரே குழப்பமாய் இருக்கிறது.

குமுறிக் குமுறி வெடிக்கிறது வானம் !
அச்சம் வேண்டாம் அருமை மக்காள் !
உடமைகள் எல்லாம் போனாலும்
ஒற்றுமை உறுதி இரு கண்ணாக
தினமும் முயல்வோம் சேருங்கள் !

பயமின்றித் துணிவோடு கரை ஏற
நம்பிக்கையோடு நாம் உழைத்து
வெற்றி வாகை சூடி விருந்துண்போம் !

# வெறுமையின் சுகம்

-வை.சுந்தர்-

அது இரவும் இல்லாத பகலும் இல்லாத
ஒரு நிலை மாறு(ம்) நேரம்!
எல்லையற்ற நீலவானம் எங்கும் ஒருவித நிசப்தம்
அசுத்தங்கள் எதுவுமே இல்லாத,
கடல் அலைகளால் நன்கு சலவை செய்யப்பட்ட
வெண் மணற் பரப்பு!
நட்சத்திரங்கள் மின்ன ஆரம்பிக்கின்றன.
பூக்கோள சுமைகளை தூக்கி யெறிந்து
நனவு நிலை மனதை நழுவ விட்டு
நீட்டி நிமிர்ந்து வெறுமையாகப் படுக்கின்றேன்.
ஆகா என்ன சுகம்!
கடல் அலைகளின் சத்தம்
செவிக்கு அளவாக இன்பமூட்ட
மெல்லிய உப்புக் காற்று மேனியை வருட
ஆகாயத்திற்குள் விழிகளை விட்டு,
இயற்கையுடன் கலந்தேன்!
உலக நிகழ்வுகள் துச்சமாகிப் போயின.
அனைத்தும் முடிந்து போகும்
வெறும் ஆரவாரங்களாகின
மனது பஞ்சு போல இலேசாகிப் போனது!
தேவைக்கு அதிகமான எண்ணங்களாலும்,
முரண்பட்ட வாய்த்தர்க்கங்களாலும்,
குரோதங்களாலும், இழப்புகளாலும்,
சோதனைகளாலும், ரணமாகிப்போன
உடலுக்கும்,உள்ளத்திற்கும்
வெறுமை தான் சுகம் போலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்று பாரதியார் சொன்னாரா?

-திருமுருகரசன்-

மகாகவி பாரதி ஈடு இணையற்ற கவிஞன். அஞ்சா நெஞ்சங்கொண்ட விடுதலை வீரன். தமிழை வளம்படுத்திய புலவன். பகுத்தறிவை மக்களுக்கு ஊட்டிய அறிஞன். காலத்தைக் கடந்து வாழும் கவிதைகளைத் தந்தவன். காலத்தை வென்று நிற்கும் கருத்துக்களால் தமிழ் இலக்கியத்திற்குப் புதுப்பாதை கண்டவன்.

அறிஞர்களும், கலைஞர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் தமது பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் அத்தகைய ஒப்பற்ற கவிஞனின் பாடல்களை மேற்கோள்களாகக் காட்டிச் சிறப்புச் செய்கின்றனர், தாமும் சிறப்படைகின்றனர்.

அதே வேளை பாரதியின் பாடல்களைத் தவறாக விளங்கிக் கொண்டதாலோ அல்லது, மேலோட்டமான பார்வையினாலோ, அல்லது தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கத்தினாலோ பாரதி சொல்லாததைச் சொன்னதாக எடுத்துக்கொள்ளும் நிலமைகளை நம் வாழ்நாளில் பல தடவைகள் நாம் எதிர்கொண்டுள்ளோம். அதில் மிகவும் பிரபல்யமானது இந்த, 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்ற விடயமாகும்.

கூட்டங்களில், மாநாடுகளில், பட்டிமன்றங்களில் எல்லாம் சிலர் பேசும்போது, மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று மகாகவி பாரதியார் சொன்னார் என்பதுபோலப் பேசிவருவதையும், எழுதிவருவதையும் நாம் அவதானித்திருக்கின்றோம். தமிழ்மக்கள் வாழுகின்ற இடமெல்லாம் - தமிழ்நாடு, இலங்கை உட்பட- பலநாடுகளில் இந்தத் தவறு இடம்பெற்று வருகின்றது.

பலமேடைகளில் இவ்வாறு, மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று பாரதியார் சொன்னார் என்று பேச்சாளர்கள் பேசிய சமயங்களில், அந்த மேடைகளில் எனக்கு அதை மறுத்துப் பேசுதல் பொருத்தமாய் அமைந்த வேளைகளில் எல்லாம், அவ்வாறு பேசுவது தவறு என்றும், எவ்வாறு பாரதியார் சொல்லியிருக்கிறார் என்றும் எடுத்துரைக்க நான் தவறியதில்லை.

உண்மை தெரிந்திருந்தும் தாம் பேசுகின்ற கருத்துக்களுக்குச் சாதகமாகப் பாரதியாரைத் துணைக்கு அழைத்து இவ்வாறு தவறாகப் பேசுபவர்களும் உண்டு. சாதாரணமாகப் பட்டி மன்றங்களிலேதான் இது நடக்கும். பெரும்பாலான பேச்சாளர்கள் உண்மை தெரியாமல், பாரதியின் கவிதைகளைப் படிக்காமல் கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்பதுபோல யாரோ எங்கோ எப்போதோ பேசியதைக் கேட்டு இவ்வாறு தவறாகப் பேசித் தங்களது அறியாமைக்குப் பாரதியாரைப் பலியாக்குகிறார்கள்.

பாரதியாருக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்பது அவர்களது எண்ணமல்ல. ஆனால் களங்கம் ஏற்பட்டுவிடுகிறது.

**உண்மையில் நடந்தது என்ன?**

1919 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம், Modern Review என்ற பெயரில் வங்காள மொழியில் வெளிவந்த பத்திரிகை ஒன்றில் எதினால் சவர்க்கார் என்ற பெங்காலிக்காரர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில், "வரலாற்றை ஆங்கிலத்தில் படிப்பிக்க முடியாது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கடிதத்திற்கு, திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவிருந்த நீலகண்டையர் என்பவர் 1919 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19 ஆம் திகதி, ஒரு மறுப்புக் கடிதம் எழுதியிருக்கிறார். நீலகண்டையர் தனது கடிதத்தில்,

*"ஆங்கிலத்தில் சொன்னால்தான் இங்கு [தமிழ்நாட்டின்] பிள்ளைகளுக்கு விளங்குகிறது. தமிழில் சொன்னால் விளங்கவில்லை. தமிழ், அறிவியல் விடயங்களைப் பேசுவதற்கோ, எழுதுவதற்கோ தகுதிபடைத்த மொழி அல்ல "*

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனை வாசித்த பாரதியார் கொதித்துவிட்டார். உடனே. "தமிழ்த்தாய்" என்ற தலைப்பில் ஒரு கவிதையை எழுதியிருக்கிறார். அந்தக் கவிதையில்தான் மெல்லத் "தமிழ் இனிச் சாகும் என்ற" சொற்றொடர் வருகிறது. கவிதை முழுவதையும் படித்தால் பாரதியார் உண்மையிலே என்ன சொன்னார் என்பதை அறியலாம்.

அவரது கவிதை இதுதான். உள்ளம் மிக நொந்து அவர் இப்படிப் பாடுகிறார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றொரு சொல்லினைக் கேட்டேன் – இனி**

**ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்**

**கொன்றிடல் போலொரு வார்த்தை – இங்கு**

**கூறத்தகாதவன் கூறினான் கண்டீர்**

**புத்தம் புதிய கலைகள் – பஞ்ச**

**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்**

**மெத்த வளருது மேற்கே – அந்த**

**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை**

**சொல்லவும் கூடுவதில்லை – அவை**

**சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை**

**மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த**

**மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்**

**என்றந்தப் பேதை உரைத்தான் – ஆ!**

**இந்தவசையெனக் கெய்திட லாமோ?**

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்**

**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

தமிழ் மொழியைத் தரங்குறைவாக, இழிவுபடுத்தி சொல்லப்பட்ட கருத்துக்களை அறிந்த பாரதியார் சிந்தை கலங்கி நொந்திருக்கிறார், நொந்திருக்க வேண்டும். ஏற்கனவே, தமிழ்நாட்டிலே, தமிழ் மொழிக்கு எதிரான அரசியல் ரீதியான, சமூகரீதியான, சமய ரீதியான நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் கண்ணுற்ற பாரதியாருக்கு இத்தகைய கருத்து மிகுந்த கவலையை அளித்திருக்கிறது.

அகிலமெங்கும் அறிவியலில் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கும்போது,"தமிழ், அறிவியல் விடயங்களைப் பேசுவதற்கோ, எழுதுவதற்கோ தகுதிபடைத்த மொழி அல்ல". என்று சொன்னால் அதன் கருத்து என்ன? அறிவியலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத அந்த மொழி மெல்லமெல்ல அழிந்துவிடும் என்பதுதானே மொழிநீலகண்டையரின் கடிதம் புலப்படுத்தும் உட்பொருள்? அதனால்தான், கோபமும், கவலையும், தமிழ்மீதுகொண்ட தாகமும், தமிழின் தகைமையினைச் சரிவரத் தெரிந்துவைத்திருந்ததால் ஏற்பட்ட வேகமும் அவரை அப்படியொரு கவிதையை எழுதத் தூண்டியிருக்கிறது.

எனவே, 'மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்' என்பது பாரதியாரின் கூற்றல்ல. 'மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என்று அந்தப் பேதை உரைத்தான்' என்பதுதான் பாரதியாரின் கூற்று. அப்படி அந்தப் பேதை உரைத்தான் என்று சொல்லும் பாரதியார், "ஆ!" என்று மனம் தாங்காது நொந்து, இந்தவசை எமக்கெய்திடலாமோ என்று பரிதவிக்கின்றார். அந்தப் பேதையின் கூற்றைத் தமிழ் இனத்திற்கே ஏற்பட்ட வசையாகக் கொள்கிறார் பாரதியார். அவரே வசையென்று வகைப்படுத்திய கூற்றை அவரே கூறியதாக பகிரங்கமாகப் பேசுவது எவ்வளவு தவறானது!

சொல்லத் தகாதவன் அப்படிச் சொல்லிவிட்டான். அந்த வார்த்தை தன்னைக் கொல்வதுபோல இருந்தது என்று சொல்லி வெதும்பி நெஞ்சம் வெடிக்கின்றார். அந்தப் பேதை, அந்த அறிவிலி அப்படிக் கூறினான். அப்படி அவன் கூறலாமா? என்று துடிக்கின்றார். அப்படிப்பட்ட பாரதியாரை, தமிழ்மொழி செத்துவிடும் என்று அவர்தான் கூறினார் என்று மேடைகளில் முழங்குவதும், ஏடுகளில் எழுதுவதும் எவ்வளவு மடமை.

பாரதியார் மேலும் என்ன சொல்கிறார்?. தமிழ்மொழி அப்படிச் செத்துவிடக்கூடிய மொழியல்ல. அது சிரஞ்சீவியாக வாழும் மொழி. அந்த மொழியிலே எவ்வளவோ கலைப் பொக்கிசங்கள் உலகமெல்லாம், எட்டுத் திசைகளிலும் பரவிக்கிடக்கின்றன. எல்லாவற்றையும் தேடி எடுத்து இங்கே கொண்டுவந்து ஒன்று சேருங்கள் என்றுதான் பாடினார்.

உலகத்தின் மூலை முடுக்குக்களிலெல்லாம் தமிழ் மக்கள் வாழ்வது ஒன்றும் புதிதல்ல. சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பே சீரோடும் சிறப்போடும், வளமோடும் வனப்போடும் பல நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்தார்கள். அந்தக் காலங்களில் எவ்வளவோ கலைப் பொக்கிசங்கள், இலக்கியங்கள் அந்தந்த இடங்களிலேயே தோன்றியிருக்கின்றன, வளர்ந்திருக்கின்றன, அந்த இடங்களிலேயே அவையெல்லாம் சிக்குண்டு போயின. அவற்றையெல்லாம் சென்று தேடி, எடுத்துவந்து இங்கே சேருங்கள் என்று கூறினார் பாரதியார்.

**சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்**

**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

என்று அவர் சொன்னது எட்டுத் திக்கும் சிதறிக்கிடக்கும் நமது தமிழ்க் கலைச்செல்வங்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியே. அவையெல்லாவற்றையும் கொண்டு வந்து குவித்துவிட்டால் செந்தமிழில் நிறைந்துகிடக்கும் அந்தச் செல்வங்களையெல்லாம் காணும் எவரும், எந்தப் பேதையும் மெல்லத் தமிழ்மொழி செத்துவிடும் என்று சொல்ல முடியுமா என்பதுதான் அவரது நம்பிக்கை.

மேற்கே வளருவதாகச் சொல்லப்படுகின்ற மேன்மைக் கலைகளையோ அல்லது மற்றைய மொழிகளிலேயுள்ள கலைகளையோ திரட்டி வந்து சேர்க்கவேண்டும், அவற்றைத் தமிழிலே ஆக்கவேண்டும், அதன்மூலம்தான் தமிழ் மொழியை அழியாது காக்க வேண்டும், என்ற கருத்தில் அவர் கூறவில்லை. 'என்றந்தப் பேதை உரைத்தான்' என்று சொன்னவனைப் பேதையாக, அறிவிலியாக அவர் சுட்டுவதிலிருந்து இதனை நாம் நன்கு உணர முடியும்.

எனவே,

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்

செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'

என்ற வரிகளை,'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற அவரது மற்றொரு பாடலின் வரிகளோடு சேர்த்துக் கருத்துக் கொள்ளுவது தவறாகும். அது வேறு இது வேறு.


எனவே, மெல்லத்தமிழ் இனிச் சாகும் என்று பாரதியார் சொன்னதுபோல என்றோ மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று பாரதியாரே சொல்லியிருக்கிறார் என்றோ பேசுவதையும், எழுதுவதையும் தமிழ் ஆர்வலர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தமிழர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

**வாழ்க தமிழ், வாழ்க பாரதி புகழ்**



# வாருங்கள் எம்மைப் பாருங்கள்

- மீரா சுந்தர் | பாண்டிருப்பு-



யாருக்கு யார் உறவு – இந்த
போருக்குப் பிறகு
கூறு கூறுகளாய்ப் பிரிந்து
கிடக்கின்றோம் – எம்
ஊருக்கு வெளியே

தாறு மாறாக சீரழிந்து எம்
தரணியிலே
தாறு நாறாக கிழிந்து இந்த
புவியினிலே
கீறிக் கிழிக்கப்பட்டு

வேறு வேறாய் வேதனையுடன்
வெந்து முழு நிலையும்
மாறு பட்டு சேறுக்குள்
சிதைந்த சின்னப் பூக்களாய்
ஒரு நேரச் சோற்றுக்காய்

வீறு நடை போட்டு
வீதியிலே நிற்கும் எமை
பாருங்கள். எம்மிடம்
வாருங்கள் நல்லதாய்
சில வார்த்தை கூறுங்கள் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்புக்கடம் பூண்ட பொற்புடைத்தேவி

# கண்ணகி

- கலாபூஷணம் முருகேசு தம்பிப்பிள்ளை -

சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் பூம்புகாரில் வாழ்ந்த ஒரு வணிகக் குடும்பத்தில் தோன்றிய ஒரு பெண்ணிண் வரலாற்றைக் கதையாய்,சரித்திரமாய் கூறுகின்றது. கண்ணகி மற்ற மகளீரைப்போல பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாது. தெய்வாம்சம் பொருந்திய போற்றுதற்குரிய தெய்வமாக மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கிறாள். "கற்புக்கடம் பூண்ட பெற்புடைத்தேவியாகிய நம் தமிழ்த் தெய்வம்" என்பதை தமிழர் உள்ளம் அனைத்துமே அறிந்து உவகையில் பூரித்துக் குலுங்கும்.

கண்ணகி பெண்தான் எனினும் மனிதப்பெண்ணாய்ப் பிறந்து பெண் தெய்வமாகியவள். தன்னிகரில்லா தன்மை கொண்டு திகழ்ந்தவள். கண்ணகி பற்றி தமிழ்த் திறனாய்வாளர்கள் வியந்து கூறுகின்றனர்.

இளங்கோவடிகள் படைத்த சிலப்பதிகாரக் காப்பியமானது கண்ணகி காலில் அணிந்த சிலம்பை முதன்மையாக கொண்டு வடிக்கப்பட்டது. கதை என்னவோ மதுரைக் காண்டத்தோடு முடிந்து விட்டாலும். கண்ணகி தெய்வத்தோற்றம் கொண்டு உலாவருவது வஞ்சிக்காண்டமே! எனலாம்.

இளங்கோவடிகள் சிலப்பதிகார பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் போதும். முதலாவதாக கண்ணகியை அறிமுகம் செய்தபின்பே கோவலனை அறிமுகம் செய்கின்றார். இதனால் சிலப்பதிகார காப்பியத் தலைவி கண்ணகி என்பது புலப்படுகிறது. கோவலன் தன்னை விட்டுப்பிரிந்து சென்று மாதவியைச் சேர்ந்தும் கண்ணகி மங்கல அணிகளனன்றி ஏனைய எந்த அணியும் அணியாது வாழ்ந்து பிறர் நெஞ்சு புகாது தன்னைத்தானே தற்காத்த கற்புக்கரசியாக வாழ்ந்தாள். தன் கணவன் கொண்டிருந்த பொருள் அத்தனையும் தன் கைவிட்டுப் போன பின்பு மீண்டும் தன்னிடம் வந்து சேர்ந்த கணவன் கோவலனை கோவியாது "சிலம்பு உள கொண்டும்" என்று கூறி சிலம்பைக் கொடுத்து தன் கணவனைக் கண்ணகி பேணுகின்றாள்.

தன் கணவன் கள்வன் எனச் சொல்லக்கேட்டுக் கொதித்தெழுந்து. சீற்றம் கொண்டு பாண்டியன் அரண்மனைக்கு ஒற்றைச் சிலம்பு கையில் கொண்டு பத்திரகாளியாகச் சென்று பாண்டியன் மீது வழக்குரைத்து, பாண்டியனை வழக்கில் வென்று, தன் கற்பின் துணையால், பாண்டியமன்னனைக் கொன்று, மதுரை மாநகரைத் தீக்கிரையாக்குகிறாள் வீரபத்தினி கண்ணகி!

தோழி தேவந்தி காமனை வழிபட கண்ணகியை அழைக்கையில் அது முறையன்று எனக்கூறித் தனது கண்கண்ட கணவனையன்றி பிற தெய்வம் தொழாளாகி தன் நெறிகாத்து நின்றாள். தமிழர் தெய்வம் கண்ணகி என்று நினைக்கும் போது உள்ளம் உவகையில் மூழ்குகின்றது.

கோவலன் கண்ணகியை விட்டுப்பிரியக் காரணம். கண்ணகியிடம் ஊடுதல் பண்பில்லாக் குறையும், கண்ணகி "கோவலனைப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று இடித்துரைத்ததையும் குறைவிலாக் கண்ணகியைச் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகாண்பதும் உண்டு.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி நிலை பற்றி "தாரும் மாலையும் மயங்கிக் கைப்பற்றுத் தீராக்காதல்" கொண்டு வாழ்ந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. கோவலன் கண்ணகியை, நீள் அடர் கூந்தலையுடைய பெண்ணே! மாசற்ற பொன்னிறம் கொண்டவளே! எக்குறையுமற்ற நறுமணம் வீசும் மலர் கொய்தவளே! கரும்பிலும் இனியவளே! கிடைத்தற்கரிய பதும நிதியே! தேனை விட இனிய சொல்லைக் கொண்டவளே! என்னுயிர் காக்கின்ற ஔதடமே! வாணிபத்தின் தலைமைகளின் வழிவந்த ஏந்திழையே! உனை எதைச் சொல்லி நான் பாட்டிசைப்பேன்? பெரும் மலையிலும் கிடைத்தற்கரிய மணியென்பேனா? பாற்கடலிலும் கிட்டாத அமுதென்பேனா? யாழ் மீட்டினாலும் எழாத இசையென்பேனா?



மாசறு பொன்னே வலம்புரி முத்தே

காசறு விரையே, கரும்பே, தேனே

அரும் பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,

பெருங்குடி வணிகன் பெருமட மகளே!

மலையிடைப் பிறவா மணியே யென்கோ!

அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!

யாழிடைப் பிறவா இசையே யென்கோ!

தாழிருங் கூந்தல் தையால் நின்னை!

இவ்விதமாய் இன்னுரை பல கூறினான் கோவலன். பலவித வர்ணனைகளினால் கண்ணகியைக் கோவலன் பாடிப்பாராட்டினான் என்றால் கண்ணகி காமக்குறை பாடுடையவள் என்று கூறுபவர்களின் வார்த்தையை நாம் ஒப்புக் கொள்ள முடியாதன்றோ!

கண்ணகியின் அடி நெஞ்சத்திலிருந்து பிறந்த வஞ்சமற்ற சொல்லே "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்பது. அது கோவலன் மீது கொண்ட அன்பில் பிறந்த சொல்லேயாகும். கண்ணகியின் அச்சொல் கோவலன் மனதில் சிறிதும் பாதிப்பை ஏற்படுத்தாதினால்த்தான் பொன்னே கொடியே புனைபூங்கோதாய்! என்று கண்ணகியைப் பாராட்டுகின்றான் கோவலன்.

ஆகையால் குறைவிலாக் குணக்குன்றாகப் பாராட்டப்படுகின்றாள்! கண்ணகி வீரக்கற்புடையாளாகக் காணப்படுகிறாள். காப்பியத் தலைப்பிற்கேற்ப கதை முடிவது மதுரைக் காண்டமாகும். இதில் கண்ணகி தனது கற்பின் துணை கொண்டு நீதி வழுவிய பாண்டியன் அரசை வென்று போரிட்டு அழித்து பாண்டிய அரசிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் செயலில் அவள் புரட்சித் தீபமாகச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் காணமுடிகின்றது.

கண்ணகி பாண்டிய மன்னனை எதிர் கொண்டு எழுப்பிய புரட்சிகரச் செயலானது அவளின் வீரக்கற்புக்கு கிடைத்த வெற்றியன்றோ! அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்னும் நியதியை முன்னிறுத்திச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் கண்ணகியின் மறக்கற்பை, புட்சியை மண்ணில் வாழும் மானிடர்க்கு வழிகாட்டியாக வற்புறுத்திக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத நேரம் பார்த்து
நெருப்பை மூட்டுவார் - அங்கே
இருந்து விட்டால் விழிசிரிக்க
மகிழ்ச்சி ஊட்டுவார்
நல்லவர்க்கும் கரியைப் பூசி
ஊத்தை யாக்குவார் - இங்கு
நம்மவர்கள் என்றைக்குத்தான்
மனித ராகுவார் ?,,,

அன்பு விதை முளையிலேயே
அழுகிப் போச்சுது - இங்கு
அரும்பி வரும் சிசுவும் இந்தப்
பால்தான் குடிக்குது

# மானுட மீட்சி

- கலாபூஷணம். கல்முனைப் பூபால் -

தெம்பு தரும் மனித நேயம்
எங்கே இருக்குது? அதைத்
தேடிக்கண்டு பிடிக்கும் எண்ணம்
யாருக் கிருக்குது!

உள்ளவற்றை எல்லோருமே
அள்ள நினைக்கிறார் - அள்ளி
உள் வீட்டிற்குள் மறைத்து வைக்கத்
திட்டம் தீட்டுறார்.
நல்லவற்றைத் தேடி,யார்தான்
அறிய முயல்கிறார் - உள்ள
நடைமுறையை மாற்றி மாற்றி
ஊத்தை யாக்குறார்.
கும்மியடிக்கும் சருகுகளாய்
மனிதன் வாழ்ந்திடில் - இந்தக்
குபேரரெல்லாம் சேர்ந்து அவரை
வாழ்த்திப் போற்றுவார்!
தம்பி கொஞ்சம் மாறி நின்று
உண்மை பேசினால் - எல்லாச்
சட்டத்தையும் அமுல்படுத்தித்
தூக்கில் போடுவார்!

குருவிபோல பறந்து பறந்து
ஏழை உழைக்கிறான் - தனது
குடும்பம் வாழ வென்றே தினமும்
மிச்சம் பிடிக்கிறான்.
பருந்துகளோ.. எங்கும்,எதையும்
சுரண்டி அமுக்கிறார் - இந்தப்
பாதகங்கள் அகன்றாற் தானே
பூமி சிரித்திடும்!

பூமி சிரிக்க சாமிமார்கள்
பூசை செய்கிறார் - அந்தப்
பூசைக்குள்ளும் தேடித் தேடி
சாமி யாடுறார்!
நாம விழிக்கும் வரையும் யாரும்
வாழ விடமாட்டார் - இந்த
நரகலுக்குள் இருந்து காப்போம்
மானுடத்தை நாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நான் சீரழியமாட்டேன்

பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா – அவுஸ்திரேலியா



எதிர்காலம் சூனியமாய் இருண்டு கிடக்க, முள்ளாய்க் குத்துகின்ற நிகழ்காலம் முடிவில்லாமல் நீண்டு கொண்டு போகின்றது. இனிமை நிறைந்த என் இளமைக்காலம் கடந்தகாலமாய்ப் பறந்து போய்விட்டது. ஏன் எனக்கு இப்படி? ஏன் எனக்கு மட்டுமே இப்படி? நான் என்ன பாவம் செய்தேன்? யாருக்கு என்ன தீமை செய்தேன்? பெணண்ணாகப் பிறநத்தது என் குற்றமா? பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையை மணந்தது குற்றமா? அவரை நம்பியது குற்றமா? எனக்கு அறிமுகமான நாட்களில் அன்பொழுகப் பேசினார். என் அழகை அவர் இரசித்த போது நான் நாணத்தால் கூசினேன். அவருக்கு, அவருக்கே நான் சொந்தமாய் ஆனபோது இந்த உலகமே என்வயப்பட்டுவிட்டது போல ஆனந்தம் அடைந்தேன். நான் அவருக்கு மனைவியாகக் கிடைப்பது தான் செய்த புண்ணியம் என்று அவர் என்னைப் புகழ்ந்தபோது, நான் நெகிழ்ந்து போனேன். எப்படி இருந்தவர் இப்போது எப்படி மாறிவிட்டார்? மறக்கமாட்டேன் என்றவர் நினைக்கமாட்டாமல் இருப்பதென்ன கொடுமை. நெஞ்சம் தாங்கவில்லையே. இவரே இப்படியென்றால்.. ஆண்களில் எவருமே நல்லவர்களாக இருக்க முடியாதே. எல்லா ஆண்களுமே இப்படித்தானா? பெணக்ளை வாழவிடாமல் வதைப்பதுதான் இவர்களின் குணமா? என்ன இது? என்கதை இப்படித் தொடக்கத்திலேயே சோகமாக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? என் வாழ்வின் தொடக்கம் இப்படி இருக்கவில்லை. ஊரிலே மதிப்போடும், செல்வத்தோடும், வசதியாகவாழ்ந்தது எங்கள் குடும்பம். அம்மா ஆசிரியை. அப்பா ஆயுர்வேத வைத்தியர். அவர்களுக்கு நான்தான் ஒரேயொரு பிள்ளை. செல்லப்பிள்ளை. கேட்டதெல்லாம் எனக்குக் கிடைக்கும். வீட்டில் நான் விரும்பியபடிதான் எல்லாம் நடக்கும். நான் வைத்ததுதான் சட்டமாக இருக்கும். அம்மாவும், அப்பாவும் என்மீது கொள்ளை அன்பை வைத்திருக்கிறார்கள். பாடசாலையில் கூட வகுப்பில் நான்தான் முதல் பிள்ளை. நடனம், நாடகம், விளையாட்டு எல்லாவற்றிலும் முன்னணியில் இடம் பிடித்தேன். என்னைச்சுற்றித் தோழிகள் கூட்டம் ஒன்று எப்போதும் இருந்துகொணடேயிருக்கும். எந்தவித கவலையும் இல்லாமல் நான் ஒரு சிட்டுக்குருவிபோலப் பறந்து திரிந்தேன்.

என் பள்ளித் தோழிகளில் சிலர் பருவ உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் காதலில் வீழ்ந்தபோதும் எனக்கு அது ஏற்பட்டதேயில்லை. நான் பதினோராம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது எனது பெற்றோர் எனக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்தார்கள்.

காலாகாலத்தில் எனக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்னும் வாழ்வியல் நடைமுறையில் அவர்கள் கரிசனையோடு ஈடுபட்டார்கள்.

மேற்கொண்டு படிக்க எனக்கு ஆசை இருந்தாலும் பெற்றோரின் முயற்சிக்கு நான் தடையாக இருக்கவில்லை. உள்ளூரிலும் வெளியூர்களிலிருந்தும் எத்தனையோ மாப்பிள்ளைகளை என்பெற்றோர் விசாரித்தார்கள். இறுதியில், ராஜாவை எனது கணவனாக அப்பாவும் அம்மாவும் தேர்ந்தெடுத்து முடிவு செய்தார்கள். ராஜாவும் எங்கள் ஊர்தான். இப்போது அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். ஒரேயொரு பிள்ளையான எனக்கு அவுஸ்திரேலிய மாப்பிள்ளையை அப்பா நிச்சயம் செய்தது தன்பிள்ளை எங்காவது வெளிநாட்டில நிம்மதியாக இருக்கட்டும் என்ற நோக்கத்தில்தான். எந்தநேரத்தில் எது நடக்குமோ என்று சொல்லமுடியாத நிம்மதியற்ற, அபாயகரமான நாட்டுப்பிரச்சினைதான் அதற்குக் காரணம்.

ராஜாவை எனக்கு முடிவுசெய்த பிறகு அவர் தொலைபேசியில் என்னோடு கதைக்கத் தொடங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் கதைப்பது ஆரம்பத்தில் பயமாகவும் வெட்கமாகவும் இருந்தது. பிறகு போகப்போக இயல்பாகிவிட்டது. பின்னர் அவரது தொலைபேசி அழைப்புக்காக ஏங்கிக்காத்துக்கொண்டிருப்பதே எனது நாளாந்த வேலையாகிவிட்டது. மணிக்கணக்கில் என்னோடு கதைப்பார். கடைசியில், வைக்கட்டா என்று அவர் சொல்லும்போதெல்லாம் சரி என்று வாய் சொன்னாலும், இல்லை என்று சொல்லவேணடும் போல இதயம் துடிக்கும்.

என்ன பேசுவது என்றில்லாமல் என்னென்னவோ எல்லாம் பேசினோம். எதைப் பேசுவது என்று தெரியாமல் எதையெதையெல்லாமோ பேசினோம். சுகம் விசாரிப்பதில் தொடங்கி சுற்றம் சூழல்களைப் பற்றியெல்லாம் நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தோம். அப்போதெல்லாம் அங்கே அவரருகே நானும், இங்கே என்னருகே அவரும் இருப்பதுபோன்ற உணர்வு இருக்கும். இதயங்கள் இடம்மாறிக்கிடக்கும்.

ராஜாவும் நானும் தொலைபேசியில் கதைக்கத் தொடங்கி, நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி கிட்டத்தட்ட ஒருவருடத்தை எட்டிக்கொண்டிருந்தது. ஏற்கனவே பேசித் தீர்மானிக்கப்பட்ட சம்பந்தம் என்பதால், நாங்கள் இருவரும் இதயத்தால் கணவன் மனைவி போலவே நெருங்கிவிட்டிருந்தோம். நேரிலே ஒருவரை ஒருவர் பார்க்கவேண்டும் என்ற துடிப்பு இருவருக்குமே இருந்தது. விரைவில் அவரோடு நான் போய் இணைந்துவிடவேணடும் என்று என் மனம் தவியாய்த் தவித்தது. அப்போது, ராஜாவுக்கு அவுஸ்திரேலியாவில் வதிவிட உரிமை கிடைக்கவில்லை அது கிடைக்கும்வரை அவர் இலங்கைக்கு வரமுடியாதாம். அதனால், என்னைப்பார்ப்பதற்காகச் சிங்கப்பூருக்குத் தான் வருவதாகவும், என்னையும் அங்கே வரும்படியும் சொன்னார்.

இதை வீட்டில் சொன்னதும் எந்தவித எதிர்ப்புமே வரவில்லை. ஆனால் அப்பாவையும் என்னுடன் போகும்படி அம்மா வற்புறுத்தினார். ஆனால் அப்பாதான், என்னைத் தனியே போய்வரும்படி சொன்னார். "படிச்சபிள்ளை. இந்தா இருக்கிற சிங்கப்பூருக்கு போய்வாறதுக்கு எதுக்கு பயம்? அதோட மாப்பிளை அங்க வந்து நிக்கப் போறார். இங்க எயாப்போட்டில இருந்து நாம ஏத்தி அனுப்பிவிட்டால் அங்க அவர் நிண்டு கூட்டிப்போகப் போறார். பிறகு அவர் அங்கயிருந்து ஏத்திவிட்டால் நாங்க இங்க எயாபோட்டுக்கு போய்க் கூட்டி வரப்போறம். அவ்வளவுதானே? " என்று அப்பா அம்மாவைச் சமாதானப்படுத்தினார். அப்பாவும் வந்தால் பரவாயில்லை என்றுதான் நானும் முதலில் நினைத்தேன். பிறகு ஏனோ தெரியவில்லை. தனியே போவதற்குச்சார்பாகவே இதயத்தில் எணணம் மிதந்தது. இருவீட்டார் சம்மதத்துடன் எங்களுக்குத் திருமணம் நடக்கப்போகின்றது என்ற நம்பிக்கையைவிட, ஒருவருடகாலமாக தொலைபேசிமூலமாக இருவரும் இதயத்தால் இணைந்துவிட்டமைதான் தனியே சென்று அவரைச் சந்திப்பதற்கான துணிவையும், சந்திப்பதில் ஆசையையும் எனக்குக் கொடுத்தது என்று நினைக்கிறேன்.

நான் சிங்கப்பூருக்குச் செல்வதற்கு இரணடு வாரங்கள் இருக்கும்போது ஒருநாள் இன்னும் ஒரு நல்ல செய்தியைக்கூறி, என்னை சந்தோசக் கடலில் மிதக்கவைத்தார். ஆம்! அவுஸ்திரேலியாவில் அவருக்கு வதிவிட அனுமதி கிடைத்துவிட்டதாம். இனி என்னை அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாமாம் என்றார். இதுவரை இழுபட்டுக் கிடந்த தனது விண்ணப்பம் இப்போது எற்றுக்கொளள்ப்பட்டுத் தனக்கு வதிவிட அனுமதி கிடைத்தது என்னால்தானாம், நான் அவருக்குக் கிடைத்த அதிஷ்டம்தானாம் என்று அவர் மீண்டும் மீண்டும் சொல்லி என்னை மட்டுமன்றி என் பெற்றோரையும் பெருமைப்படுத்தினார். விசாவுக்கு நான் விண்ணப்பிப்பதற்கான பத்திரங்களை சிங்கப்பூருக்கு வரும்போது கையோடு கொண்டுவருவதாகச் சொன்னார். சந்தோசத்தில் நான் துள்ளிக் குதித்தேன்.

வதிவிட அனுமதி கிடைத்துவிட்டால் அவர் இங்கேயே வரலாமே. வந்தால் கலியாணத்தையும் செய்யலாம் அல்லது பதிவையாவது வைக்கலாமே என்று அப்பா என்னிடம் சொன்னார். உடனே ராஜாவைத் தொடர்புகொணடு இதுபற்றிக் கேடடேன். வதிவிட அனுமதி கிடைத்ததும் சொந்த நாட்டுக்குப் போவது சரியில்லையாம். நேற்றுவரை சொந்தநாட்டில் தனக்குப் பிரச்சினை என்று விண்ணப்பித்துவிட்டு இன்றைக்கு விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டதும் மறுநாளே சொந்த நாட்டுக்குச் செல்வது சட்டத்தைப் பச்சையாக ஏமாற்றுவதாகுமாம். அப்படிப்பலர்செய்கிறார்கள்தானாம் ஆனால் தான் இன்னும் இரண்டு வருடங்களுக்குப்பிறகு பிரசாஉரிமை எடுத்தபின்னர்தான் நாட்டுக்கு வருவாராம் என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்னது எனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு முக்கியமானதாகத் தெரியவில்லை. உடனேயே அவர் ஊருக்குவந்து என்னைத் தன்னோடு அழைத்துச் செல்லவேண்டும் என்ற ஆசை மனதில்நிரம்பியிருக்கும்போது சட்டம்பற்றிய விடயம் எதையும் மூளை கிரகிப்பதாக இல்லை. ஆனால் அப்பா ராஜாவை மிகவும் மிகவும் புகழ்ந்தார். தன்னைப் போலவே தனது மருமகனும் நேர்மையானவராக இருப்பதாகச் சொல்லிப் பெருமைப்பட்டார்.

இரண்டு வாரங்கள் எனக்கு இரண்டு வருடங்கள்போல நீண்டு அந்த நாளும் வந்தது. சிங்கப்பூர் விமான நிலையத்தில் அவர் எனக்காகக் காத்துநின்றார். பின்னர் அவருடன் காரில் அருகே அமர்ந்திருந்ததும், அவரோடு ஹோட்டலுக்குச் சென்றதும், அவரோடு தனியாகக் ஹோட்டல் அறையில் தங்கியிருந்ததும் எனக்குப் புதுப்புது அனுபவங்கள். என் வாழ்வில் மறக்கமுடியாத அத்தியாயங்கள். அவரோடு சிங்கப்பூரில் தங்கி நின்ற அந்த நாட்களில் நான் இந்த உலகத்தையே மறந்திருந்தேன். வானத்தில் பறப்பதுபோன்ற கனவில் மிதந்திருந்தேன். மனமெல்லாம் மகிழ்ச்சி நிரம்பித் திளைத்திருந்தேன். குதூகலத்தில் களித்திருந்தேன்.

ஒரே அறையில் தங்கியிருந்தோம். ஒன்றாகச் சுற்றினோம். கடைகடையாக ஏறி இறங்கினோம். அப்படியிருந்தும் முதல் இரண்டு நாட்களும் ராஜாவின் விரல் நுனிகூட என்மேல் பட்டதில்லை. அதனால் அவர்மீதிருந்த அன்பைவிட மதிப்பு மேலும் உயர்ந்தது. இப்படிப்பட்டவருக்கு மனைவியாவது எனக்குப் பெருமையாக இருந்தது. மூன்றாம் நாள் செந்தோசா என்ற இடத்திற்குப் போனோம். அந்தச் சுற்றுலா மையத்தில் இருவரும் சிட்டுக்குருவிகளைப்போலச் சுற்றித் திரிந்தோம். நாள் முழுவதையும் அங்கேயே கழித்துவிட்டு நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வந்தபோது இருவருமே மிகவும் களைத்துப் போயிருந்தோம்.

அன்றிரவுச் சாப்பாட்டுக்கு அங்கே இருக்கும் ஒரு தமிழ்ச் சாப்பாட்டுக் கடைக்குச் சென்றோம். அந்த இடம் எனக்குக் கொழும்பில் இருப்பதுபோன்ற உணர்வைத் தந்தது. அந்தக்கடையில் இட்லி, தோசை, சப்பாத்தி என்று வகைவகையான உணவுகளைப் பரிமாறினார்கள். அத்துடன் அங்கே மெல்லிய சத்தத்தில் எந்நேரமும் தமிழ்ப்பாடல் கேட்டுக்கொண்டேயிருந்தது. ராஜா எங்களுக்குத் தோசை வரவழைத்தார். தோசையென்றால் தோசை அப்படியொரு தோசையை நான் கண்டதேயில்லை. இரண்டடி விட்டத்தில் பெரிதாக இருந்தது. பேப்பரைப்போல மெல்லியதாக இருந்தது. சுவையாகவும் இருந்தது. என்னைப் பொறுத்தவரையில் தோசையின் சுவையைவிட அந்தநேரம் அங்கே கேட்டுக்கொண்டிருந்த பாடல் இதயத்திற்கு இன்னும் சுவையாக இருந்தது. உண்மையில் தோசையின் சுவைக்கு அந்தப்பாடல் என்மனதில் ஏற்படுத்திய தாக்கம்தான் காரணமோ தெரியவில்லை.

"நீயேதான் எனக்கு மணவாட்டி என்னை மாலையிட்டுக் கைப்பிடிக்கும் சீமாட்டி.." என்ற அந்தப்பாடல் எங்களுக்காகவே அங்கே ஒலிப்பது போலவே எனக்கு இருந்தது.

அங்கிருந்து ஹோட்டல் அறைக்கு வந்தபோது மிகவும் அசதியாக இருந்தது. அன்றுமுழுக்க செந்தோசாவில் சுற்றிய களைப்பு. இரவுச் சாப்பாட்டின்பின்னர் இன்னும் அதிகரித்தது. அப்படியே படுக்கைக்குச் செனறுவிட்டோம். சில நிமிடங்களில் என்ன உணர்வு அவருக்கு ஏற்பட்டதோ தன்கையை என்மேல் படரவிட்டார். நான் தடுக்கவுமில்லை. தள்ளிப் படுக்கவும் இல்லை. உண்மையில் அவரது கை என்மேல் படுவதை என்மனம் விரும்பி ஏற்றுக்கொண்டது என்றுகூடச் சொல்லலாம். அவரது கை என்மேல் படும்வரை எவ்வளவோ பேசிக்கொண்டிருந்த நாங்கள் அந்தக் கணத்திலிருந்து ஒரு வார்த்தைகூடக் கதைக்கவில்லை. இருவருக்கும் இடையில் மௌனம் நிலவியது. இடைவெளி குறைந்தது. என்னருகே அவர் வந்தாரா அல்லது தன்னருகே என்னை இழுத்துக்கொண்டாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படியே திடீரென்று என்னை அணைத்துக்கொண்டார். அவ்வளவுதான் உள்ளங்களின் இணைப்பு முன்னின்று இழுக்க, தம்பதிகளாகப்போகிறோம் என்ற பிணைப்பு பின்னின்று தள்ள, எந்த நினைப்பும் இல்லாமலே இளமைதீயில் இருவரும் எரிந்து குளிர்ந்தோம். அன்றிரவு என்னை அவரிடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டேன்.

காலை எழுந்ததும் எனக்குக் கவலையாக இருக்கவில்லை. நாளை நடக்கவேண்டியது நேற்று நடந்துவிட்டது என்ற அளவில்தான் என் மனநிலை இருந்தது. அதனால் அங்கிருக்கும்வரை அந்த உரிமையை அவர் மீண்டும் மீண்டும் எடுத்துக்கொண்டபோது அது என்கடமை என்று நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்கிக்கொண்டேன்.

முன்னர் திட்டமிட்டிருந்த படியே மூன்று நாட்களில் நான் கொழும்புக்கு வந்துவிட்டேன் ராஜா மறுநாள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றார். சேர்ந்த உடனேயே தான் சுகமாகச்சேரந்ததுபற்றிச் சொல்லிவிட்டு சிங்கப்பூரில் எங்களுக்குள் நடந்தவைகளைப் பற்றியெல்லாம் கதைத்தார். தொலைபேசி உண்மையில் ஓர் அற்புதமான சாதனம்தான். நேரிலே கதைப்பதற்குத் தயங்குகின்ற எவ்வளவோ விடயங்களைக் கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல் தொலைபேசியில் கதைக்க முடிகிறது. சிங்கப்பூரின் இன்ப நினைவுகளைமீட்டுக் கொண்டிருந்த அவரது அன்பு வார்த்தைகளில் நான் கசிந்து உருகினேன். அடுத்தவாரமும் அழைத்தார். என்னைச் சிணுங்கவைத்து அவர் மகிழ்ந்தார். அவரை மகிழவைத்து நான் சிணுங்கினேன்.

எனது இன்பமும், மகிழ்ச்சியும் அதிக நாள் நீடிக்கவில்லை. அதற்குப் பின்னர் இரண்டு வாரங்களாக அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பே வரவில்லை. ஏதாவதுசுகயீனமோ என்று நாங்கள் கவலைப்பட்டோம். பின்னர் நானே தொடர்புகொள்ள முயன்றேன். அவரது கைத்தொலைபேசி துண்டிக்கப்பட்டுவிட்டதாக அறிவித்தல் வந்தது. வீட்டுத் தொலைபேசியின் மணி அடித்துக்கொண்டேயிருந்தது. யாருமே எடுப்பதாக இல்லை.

பலநாட்கள், பலமுறை முயன்ற பின்னர் அவரோடு தங்கியிருந்த பாலா எடுத்தார். அவரது

பேச்சு முன்புபோல இல்லை. முன்னுக்குப்பின்முரணாகக்கதைத்தார். என்னோடு கதைக்க விரும்பாதவர் போலக் காட்டிக்கொண்டார்.

எனக்கு இதயத்தில் விண்ணென்று வலித்தது. ராஜா இப்போது அங்கே இல்லை என்றும் ஒருவாரத்திற்கு முன்னர் வேறு வீட்டுக்குப் போய்விட்டதாகவும் சொன்னார். தனக்கு அவர் எங்கே போயிருக்கிறார் என்று தெரியாதென்றும், அவரது தொலைபேசித் தொடர்புகள் ஏதும் தன்னிடம் இல்லை என்றும் சொன்னார். அவரது பேச்சு நம்பக்கூடியதாக இருக்கவில்லை. எங்கள் வீட்டில் சோக மேகங்கள் சூழ்ந்தன. அப்படியிருக்குமோ, இப்படியிருக்குமோ என்று எப்படியெப்படியெல்லாமோ எண்ணியெண்ணிக் குழம்பினோம். நான் அங்கே போனதும் இருவருக்குமாக இப்போதே புது வீடுபார்த்து அங்கே போயிருக்கிறாரோ என்று அம்மா சாதகமான ஒரு சந்தேகத்தை என்னிடம் விதைக்க முனைந்தார். அப்படியென்றால் ராஜா அதை மிகவும் சந்தோசமாக என்னிடம் சொல்லியிருப்பாரே. தொடர்பு கொள்ளாமலே இருப்பாரா? ஒருவேளை அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ? நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது. ஓவென்று அழுதுவிட்டேன். அவருக்கு ஏதோ நடந்துவிட்டது. அந்தப் பாலாவும் அதை மறைக்கிறான். அவர் ஒருநாளும் இப்படி இருக்கமாட்டார். என்னோடு பேசாமல் இருக்க அவரால் முடியாது. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது அவருக்கு என்னவோ நடந்துவிட்டது என்று நான் அழுது புலம்பினேன். ராஜாவைத் தொடர்பு கொள்ளவே முடியவில்லை. அவரைப்பற்றி எந்தத் தகவலையும் அறிய முடியவில்லை. ராஜாவின் குடும்பத்தவர்களுக்கு அவர் சிங்கப்பூர் வருவதும், என்னை வரச்சொன்னதும் ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை. என்ன அவசரம் என்றும் வீண் செலவு என்றும் அவர்கள் வெளிப்படையாகவே சொல்லியிருந்தார்கள். அவர்களுக்காக ராஜா என்னிடம் தந்திருந்த நகைகள், பொருட்களையெல்லாம் அம்மா அவர்களின் வீட்டுக்குச் சென்று கொடுத்தபோதுகூட அவர்கள் திருப்திகரமாக நடந்துகொள்ளவில்லை என்று அம்மா கவலைப்பட்டது எனக்குத் தெரியும் அதனால்தான் ராஜாவைப்பற்றி அவர்களிடம் இவ்வளவு நாளும் விசாரிக்கவில்லை. இனி வேறு வழியில்லை என்று கடைசியாக அப்பா ராஜாவின் பெற்றோரிடம் விசாரித்தார். அப்படி எதுவும் இல்லை என்றும் அதற்கு முதல்நாட்தான் தங்களுடன் ராஜா தொலைபேசியில் கதைத்ததாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் அறிந்தால் மேலும் கவலைப்படுவேன் என்று அப்பா உடனே என்னிடம் சொல்லவில்லை. எதையும் நன்றாக யோசித்து நிதானமாக முடிவெடுக்கும் அப்பாவுக்கு ராஜாவில் சந்தேகம் வந்துவிட்டது. ராஜா சிங்கப்பூரில் என்னிடம் எப்படி நடந்துகொண்டார் என்றும் எங்களுக்குள் ஏதாவது பிரச்சினை, வாக்குவாதம் ஏற்பட்டதா என்றெல்லாம் கேட்டார். அப்படி எதுவுமே இல்லை என்றும் என்னோடு மிகவும் அன்பாகவே இருந்தார் என்றும் நாங்கள் மிகவும் சந்தோசமாகவே இருந்தோம் என்றும் உண்மையைச் சொன்னேன்.

எங்களின் சொந்தக்காரர் ஒருவரும் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார் அப்பா அவரைத் தொடர்பு கொண்டார். அவர் இருப்பது மெல்பேணிலாம். ராஜா இருப்பது சிட்னியில். அதனால் தனக்கு எதுவும் தெரியாதென்றும் விசாரித்துவிட்டுச் சொல்வதாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சொன்னாராம். என்ன சிட்னியும்? என்ன மெல்பேணும்? எல்லாம் அவுஸ்திரேலியாவில்தானே! என்ன சொல்கிறார்கள் இவர்கள் எல்லாம், என்று எனக்கு எரிச்சல்தான் அப்போது வந்தது. ஆனால் சில நாட்களில் அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். நான்தான் எடுத்தேன். அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. அப்பாவோடு கதைக்கவேண்டும் என்றார். அப்பாவிடம், ராஜாவை நம்பவேண்டாம் என்றும், ராஜா என்னைத் திருமணம் செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டதாகவும் சொல்லியிருக்கிறார் நான் பதினோராம் வகுப்பு வரைதான் படித்திருக்கிறேனாம். என்படிப்பு அவுஸ்திரேலியாவில் போதாதாம். என்னைக் கலியாணம் செய்தால் அங்கேயிருக்கும் தமிழ் மக்களிடையே தனக்கு அவமானமாக இருக்குமாம் என்றும் ராஜா சொன்னதாகச் சொன்னாராம். நான் இதையெல்லாம் நம்பவில்லை. ராஜாவே பதினோராம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது படிப்பை விட்டுவிட்டுச் சவூதிக்குப் போனவர். பின்னர் அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் போனவர். அவுஸ்திரேலியாவிலும் தான் ஆங்கிலத்தைத் தவிர வேறு ஒன்றுமே படிக்கவில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கிறார். அவரா இப்படிச் சொல்லியிருப்பார். இருக்க முடியாது. இதில் ஏதோ சூது இருக்கிறது. யாரையும் நம்பமுடியாது என்று அப்பாவிடம் சொன்னேன்.

அப்பாவிடமும் அம்மாவிடமும் நான் என்னதான் மறுத்துக்கதைத்தாலும் என் உள்ளத்திலும் ஒருவித பயம் படரத்தொடங்கியிருந்தது. நான் ஏமாற்றப்பட்டு விடுவேனோ என்ற எண்ணம் நாளாக நாளாக எனக்கு வலுத்துக்கொண்டே வந்தது.

முன்னர் சிந்திக்காத சில விடயங்கள் அப்போது என் சிந்தனைக்கு வந்தன. சிங்கப்பூருக்குப் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நான் அவரை அவரது கைப்பேசியில் அழைத்தபோது, தான் குடிவரவுத் திணைக்களத்திலிருந்து அப்போதுதான் வந்துகொண்டிருப்பதாகவும், என்னை அங்கே எடுப்பதற்கான எல்லா பத்திரங்களும் கிடைத்துவிட்டதாகவும், வரும்போது அவற்றைக் கொண்டுவருவதாகவும் சொன்னார். சிங்கப்பூரில் இருந்து நான் வெளிக்கிடும்போது அந்தப் பத்திரங்களைக் கேட்டேன் அவை இன்னும் தன்கைக்கு வரவில்லை என்றும் அதற்கு இன்னும் நாள் எடுக்கும் என்றும் பின்னர் தபாலில் அனுப்பிவைப்பதாகவும் சொன்னார். அன்றைய மன நிலையில் அதுபற்றி எனக்கு எதுவுமே வித்தியாசமாகத் தோன்றவில்லை. ஆனால், பிரச்சினை எழுந்தபின்னர் அதையெல்லாம் மீண்டும் மீண்டும் மூளை துருவிப்பார்த்துத் துடித்தது. எடுத்துவிட்டேன் என்று அவுஸ்திரேலியாவில் இருந்து சொன்னது பொய்யா? அல்லது இன்னும் கிடைக்கவில்லை என்று சிங்கப்பூரில் வைத்துச் சொன்னது பொய்யா? முன்னையது பொய்யென்றால் அதை வெறும் புழுகு என்று ஒதுக்கிவிடலாம். அது உண்மையாயிருந்தால், பின்னர் சொன்னது வெறும் பொய்மட்டுமல்ல திட்டமிட்ட பொய்யல்லவா? ராஜா ஏன் இப்படி நடக்க வேண்டும்?

எப்போதும் கலகலவென்று மகிழ்ச்சி மட்டுமே நிலவிய எங்கள் வீட்டில் கவலை நிறைந்துகொண்டது. சோகம் சூழ்ந்து கொண்டது. ஒருநாள் அம்மா சிங்கப்பூரில் ஏதாவது இசகு பிசகாக நடந்ததா என்று வெளிப்படையாகவே துருவித்துருவிக் கேட்டபோது என்னால் ஒழிக்க முடியவில்லை. வெட்கத்தோடும் வேதனையோடும் அம்மாவிடம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டேன். அம்மா தன் தலையில் அடித்துக்கொண்டா. அந்தக் கணத்திலிருந்து அடிக்கடி விம்மிவிம்மித் தனக்குள் அழுதுகொண்டேயிருப்பா. அன்றிலிருந்து என்னிடம், "என்னடி வந்துற்றா இல்ல.. ஏதாவது பிரச்சினையா?" என்று ஒவ்வொருநாளும் கேட்டுக்கொண்டேயிருந்தா. சிலவேளை நான் மௌனமாக இருந்துவிட்டால் "வாயைத் திறந்து சொல்லண்டி.." என்று அதட்டுவா. அப்போதெல்லாம் அவவின் தொண்டையில் இறுகிநிற்கும் துயரமும், கண்களை நிறைத்துநிற்கும் கண்ணீரும் என் நெஞ்சைப் பிழியும். இதெல்லாம் வீணாண பயம் என்று ஆரம்பத்தில் நினைத்திருந்த நான் உண்மையாகவே நாள் தள்ளிப் போனபோது அதிர்ந்துவிட்டேன். முதன்முதலில் அந்தச் சந்தேகம் எனக்கு எழுந்தபோது வயிற்றில் பகீர் என்று பயம் எரிந்தது. ஈயத்தைக் காய்ச்சி இதயத்துள் விட்டதைப்போல திகில் நிறைந்தது. என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

எந்தப் பிரச்சினையுமே இல்லாமல் ராஜாவும் நானும் திருமணம் செய்வதாக இருந்தாலும் கூட திருமணத்திற்கு முன்னர் தாயாகிவிட்டால் அது இந்தச் சமுதாயத்தின் மத்தியில் என் வாழ்வின் மாறாத வடுவாகிவிடும். அப்படியிருக்கும்போது, ராஜா என்னைக் கட்டுவாரா என்பதே கேள்விக்குறியாக இருக்கும்போது... என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. நாள் தள்ளிப் போவதை நான் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. எல்லாம் ஒழுங்காக வருவதுபோல அம்மாவிடம் நடித்துக்கொண்டேன். நானே அதற்கொரு தீர்வு காண முடிவெடுத்தேன். நான் விட்ட தவறினால் ஏற்படக்கூடிய விபரீத விளைவில் இருந்து நான்தான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். ராஜாவுக்கும் எனக்கும் திருமணம் நடந்தாலும்சரி, நடக்காமல் போனாலும் சரி, எனது முடிவினால் எந்தப் பாதிப்புமே ஏற்படப்போவதில்லை.

யாருக்கும் தெரியாமல் டாக்டர் அமுதினியைச் சென்று சந்தித்தேன். எல்லா விபரங்களையும் அவரிடம் சொல்லி அழுதேன். எனது கதையைக் கேட்டு அவரது கண்களும் கலங்கின. ஆனால் நான் எடுத்த முடிவுக்காக என்னைப் பாராட்டினார். எனக்கு ஆறுதல் கூறினார். நல்ல வார்த்தைகளால் தைரியமூட்டினார். மூன்றாம் நாள் எல்லாம் சரியாகிவிட்டது. ஒரு மாதத்தின் முன்னர் உடலின் ஏறிய சுமை இறங்கிவிட்டது. என் உயிர் உள்ள வரை இறக்கிவைக்க முடியாத உள்ளத்தின் சுமையோ ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டிருந்தது.

ராஜாவின் வீட்டுக்காரரும் வரவர எங்களை வெறுக்கத் தொடங்கினார்கள். காரணம் தெரியாமல் நாங்கள் கலங்கினோம். ராஜா தங்களோடும் தொடர்புகொள்வதில்லை என்று அவர்கள் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். அது உண்மையா பொய்யா என்பது தெரியாவிட்டாலும் அதற்குப்பிறகும் ராஜாவைப்பற்றி அவர்களிடம் கேட்பதில் பயனில்லை என்று விட்டுவிட்டோம். ராஜாவின் அண்ணன் மட்டும் ஒருநாள் என்னைக்கண்டு ராஜாவை மறந்துவிடும் படியும், அவன் என்னைத் திருமணம் செய்யமாட்டானாம் என்றும், தான் எவ்வளவோ சொல்லிப் பாரத்தும் அவன் கேட்பதாயில்லை என்றும் சொன்னார். அழுகையைத்தவிர அவரோடு எதுவும் பேச என்னால் முடியவில்லை.

ராஜாவுக்கு நான் எத்தனையோ கடிதங்கள் எழுதித் தெரிந்தவர்கள் மூலம் அனுப்பியிருக்கிறேன். ஒன்றுக்கும் பதில் இல்லை. எங்களுக்குத் தெரிந்தவர்கள், எங்களைத் தெரிந்தவர்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று அவுஸ்திரேலியாவில் யார்யாரையெல்லாம் தொடர்புகொள்ள முடியுமோ அவர்கள் மூலமாகவெல்லாம் ராஜாவுக்குத் தூதுவிட்டோம். பலர் எங்களுக்காகப் பரிதாபப்பட்டார்கள். அவர்களில் சிலர் உண்மையாகவே முயற்சியெடுத்து ராஜாவைத் தொடர்புகொண்டு எங்களுக்கு விபரம் சொன்னார்கள். பெரும்பாலானோர் தந்த தகவல்கள் ஒரே மாதிரியாகவே இருந்தன. ராஜா என்னை மறந்துவிட்டார். அவருக்கு என்னைவிட (தன்னைவிட) படித்த மனைவி தேவைப்படுகிறது. சிங்கப்பூருக்கு என்னைப் பெண்பார்க்கப் போனதாக சிலரிடம் ஒத்துக்கொண்டிருக்கிறார். சிலரிடம் அப்படி நடக்கவில்லை என்றும், என்னைத் தான் கண்டதேயில்லை என்றும் சொல்லியிருக்கிறார். இப்படியே ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. இதற்குமேலும் ராஜாவை எப்படி நம்புவது? அவரின் மனமாற்றத்திற்கு என்ன காரணம் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது. என்னைப்பார்த்து என் அம்மாவும் அப்பாவும் படும் வேதனையை ஆரம்பத்தில் என்னால் தாங்கமுடியாமல் இருந்தது. இப்போது எல்லாம் பழகிவிட்டது. எனக்கு வேறொரு திருமணம் செய்வதற்கு முயற்சிகள் நடக்கின்றன. நான் சிங்கப்பூருக்குப் போய் ராஜாவோடு தங்கிநின்றது ஊருக்கே தெரிந்த விடயம்.

அங்கே என்ன நடந்ததென்பது யாருக்கும் தெரியாவிட்டாலும், எதுவும் நடக்காமல் இருந்திருந்தாலும் கூட எல்லாமே நடந்திருக்கும் என்று சத்தியம் செய்து சொல்லக்கூடிய சமுதாயத்தில் என்னால் எப்படி இன்னொருவருடன் நிம்மதியாகக் குடும்பம் நடத்த முடியும். எப்படிப்பட்ட உத்தமராக எனக்குத் தெரிந்தவர் இப்படி ஏமாற்றியிருக்கும்போது. இன்னொருவரை நான் எப்படி நம்பமுடியும்? யாரையும் நான் ஏமாற்ற மாட்டேன். எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவேன். அதற்குப் பின்னரும் என்னை ஏற்றுக்கொண்டு திருமணம் செய்பவரின் தாராளமனப்பான்மை எவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்கும்? சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் என் உள்ளத்திற்குச் சாட்டை அடி விழாதுஎன்பதற்குஎன்னஉத்தரவாதம்? பிள்ளைகளைப் பெறுவதும், கட்டியவருக்குப் பணிசெய்வதும்தான் வாழ்க்கையா? அதற்காக வாழ்நாள் முழுவதும் துன்பத்திலேயே உழல வேண்டுமா? ஒருவரின் தொடர்பும், ஒருநாள் உறவும் என் ஆயுள் வரைக்கும் போதும். (யாவும் கற்பனை)



போதும் என்று நொந்துபோய்
புதுவாழ்வைத் தேடுகிறீர்களா?
ஒரு புதிய புத்தகத்தை வாங்கி
வாசிக்கத் தொடங்குங்கள்
- இங்கர்சால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது தீக்குச்சி...

பாண்டிருப்பு - கன்னிமுத்து வெல்லபதியான் -

அற்புதப் படைப்பே
அதிசய தீக்குச்சியே !
வணக்கம் - வா வெளியே !

வீட்டுக் குப்பைகளை
வீதியோரத்துச் சகதிகளை
இரு தீக்குச்சிகளைக் கொண்டு
எரித்து விட்டாய்- வெற்றிகரமாய்

வீடோ இருண்டு வர
அடுத்த கட்ட முயற்சிக்காய்
ஆயத்தமாகி விட்டாய்...
எண்ணெய் ஊற்றி திரியைத் தூண்டி
மூன்றாவது தீக்குச்சியைக் கொண்டு
விளக்கை ஏற்றிவிட்டாய்...

சாம்பல்கள் வெளியே பறக்க
சந்தோசச் சாரல்கள் உள்ளே பிரவகிக்க
பிறந்த மண்ணோ "பளிச்சென்று" சிரிக்க
நீயோ மார்பு தட்டுகிறாய்
நடமாடும் வெளிச்ச வீடாய்.
வாழ்த்துக்கள் வண்ணச் சரங்களாய்...

இருந்தும் எனக்குள்வே(ா) ஏக்கமாய்
எப்போது உனக்குள்ளே
அறியாமை இருள்களை
ஆணவக்குப்பை சகதிகளை
எரிக்கும் ஞான தீயமதனை
ஆறாவது தீக்குச்சியினைக் கொண்டு
ஏற்றப்போகிறாய்...?

ஓ ! அதிசயத் தீக்குச்சியாகிய உன்னிலே
ஆறாவது தீக்குச்சியாகிய பகுத்தறிவு
இனியாவது எரியட்டுமே! உடனே
குன்றிலிட்ட தீபமாய்...
குவலயமெங்குமே ஒளிக்கதிர்
பாய்ச்சிய படியாய்...



# குருட்டுக்கடவுள்கள்

- வே.முல்லைத்தீபன் -

சத்தத்திற்கும்
சம்பவத்திற்கும்
சற்றும் தொடர்பில்லை
சிந்திப்பீராக!

பாழ்பட்ட
வாழ்கையிது
வௌவாலாய்த்
தொங்குகிறது.

இருபத்தோராம்
நூற்றாண்டாகியும்
சிவிலுவையின்னுமே யேசுவை
சுமந்துதானிருக்கிறது.

கடன்பட்டு கட்டிய
கட்டுமரமெல்லாம்
காகிதக் கப்பலாய்
கரை தட்டுகின்றது.

சுற்றுலாக்கள்
சுடலைகளையும்
சுகமான நகரமாக
சுற்றிப்பாக்கிறது.

வெள்ளை நஞ்சுகளின்
வில்லங்கமான விளையாட்டால்
உள்வீடுகளின் தொகையும்
அதிகரித்தே போகிறது.

காவோலைகளை
காசோலைகளாக்கிட
குருத்தோலைகளும்
காலம் பார்க்கிறது.

கட்டிய தாலியும்
கும்மிருட்டில்
கணவனுடன்
காணாமல் போகிறது.

வறுத்த வயதுகளின்
விறைத்த உடல்களில்
விரதங்கள் மட்டும்
விலகவே இல்லை.

இத்தனைக்கும் அப்பாலும்
கண்கண்ட கடவுள்கள் கூட
கல்லாய் இருப்பதன்
கோட்பாடுதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தைக் கையாளுதல்

கா.சாந்தகுமார்
உளவளத்துணையாளர்
கல்முனை

"தனியொருமனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" எனும் பாரதியாரின் கவிதை வரிகளில் கோபம் வெளிப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இவரின் கோபம் நல்ல கவிதையை தோற்று வித்திருக்கின்றது. இது ஆரோக்கியமான கோபவெளிப்பாடு.

கோபம் என்பது தீமையான வெளிப்பாடா? கேபாம் வராமல் இருப்பது நல்லதா? எனும் விளக்கங்களுக்கு விடை தேடுகின்றபொழுது. கோபம் பொதுவாக எல்லோருக்கும் ஏற்படுகின்ற ஒன்றாகும். கோபம் என்பதை தீய பண்பு என்றே கருதுகின்றனர். ஒவ்வொரு உயிரும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் கோபப்படுகின்றது. கோபம் ஏற்படும் போது அதனை வெளிப்படுத்தும் முறை அல்லது அடக்கிவைத்தல் ஆரோக்கியமற்ற நிலைமையை உருவாக்கும் வேளையில் கோபம் ஒரு தீய மறையான பண்பாக கருதி வெறுக்கப்படுகின்றது.

பிறரை துன்புறுத்தாத கோபம் ஒரளவு ஆரோக்கியமானது. கோபத்தை ஆரம்பத்தில் இனங் கண்டு அதிலிருந்து நம்மையும் காத்து,பிறரையும் காப்பது அவசியம். அப்படியானால்கோபத்தைஅடக்கலாமா?கட்டுப்படுத்தலாமா? இல்லை அதுவும் ஆரோக்கியமற்ற நிலமையாகும். கோபம் பெரியோர்களுக்கு ஏற்படுவதைப்போல சிறுவர்களுக்கும் ஏற்படுகின்றது. இந்த நிலையில் பிள்ளையின் வெளிப்பாட்டை ஆசிரியர் ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்த வழிகாட்ட வேண்டும்.

சிறுவர்களுக்கு ஏன் கோபம்வருகின்றது? பிள்ளைகள் தமது இயல்பு நிலைக்கு மாறாக ஒன்றை எதிர்கொள்ளும் போது கோபம் வருகின்றது. மகிழ்ச்சியான செயல் ஒன்றின் போது குறுக்கிட்டால் கோபம் வரும். பிடிக்காத ஒன்றைச் செய்யும் படிவற்புறுத்தினால் கோபம் வரும். துன்பம், கசப்புணர்வுகளில் உளத்தாக்கங்களில் இருக்கும் இந்த வேளையில் ஆசிரியர்கள் அவதானமாகச் செயற்பட்டு இத்தகைய கோபத்தை கையாள வேண்டும்.



கோபம் வந்தவுடன் அதனை வெளிக்காட்டும் இயல்பை சிறுவர்களிடம் காணலாம். இந் நிலைமையில் ஒரு மாணவனை அடிப்பான், உதைப்பான், கிள்ளுவான், பென்சிலினால் குத்துவான், துப்புவான், கடிப்பான், ஏசுவான், பட்டப்பெயர் கூறுவான், தலையை மோதுவான். இது போன்று வன் முறைகளை வெளிக்காட்டுவான். இது வகுப்பறைச் சூழலை மிகவும் பாதிக்கும். இதே நேரம் கோபம் வருபவர்களிடம். உடலில் பல மாற்றங்கள் ஏற்படும். கண்சிவக்கும், இதயம் பலமாக துடிக்கும், வியர்வை வெளியேறும், எண்ணம் ஒரு நிலைப்பட முடியாமல் போகும். இதனால் கற்றலில் சிக்கலை ஏற்படுத்தும். இதிலிருந்து மாணவர்களை மீட்டெடுப்பது ஆசிரியர்களின் கடமையாகும். கோபத்திற்குட்பட்ட மாணவரை அழைத்து கோபத்தின் தன்மை, காரணம் என்பவற்றை அறிந்து அதனைக் கையாள வேண்டும்.

கோபத்தைக் கையாளும் விசேட இயல்பாக்கல் முறைகளைப் பார்ப்போமானால் பிள்ளைகளிடம் இயல்பாக காணப்படுகின்ற ஆற்றல்களை அறிந்து அதனூடாக கோபத்தைக் கையாளலாம். ஆடல், பாடல், வரைதல், ஆக்கச்செயற்பாடுகள், விளையாட்டு, கதைசொல்லல், நடித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடவைத்து கோபத்தை வெளியேற்ற வேண்டும்.

சித்திரம் வரைதல் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உணர்வுகளை வெளிக்காட்டும் போது. நிறங்களின் மூலமும் மாணவர்கள் தமது உணர்வுகளை வெளிக்காட்டியிருப்பார்கள். அதனை அவதானமாக மாணவர்களிடம் கலந்துரையாடி அதன் தன்மையினை வெளிக்கொணர ஆசிரியர் துணைபுரிய வேண்டும்.

இதே போன்று பல முறைகள் காணப்படுகின்றன. அதில் கைத்திறன் செயற்ப்பாடுகள், நாடகம் நடிக்கவைத்தல் ,கதைசொல்ல வைத்தல், சம்பவ விபரிப்பு முறை , விளையாட்டு முறை, நடத்தை சிகிச்சை முறை, சாந்தவிதி முறை, உளவளத்துணை என இக் கோபத்தினை கையாளவேண்டியுள்ளது. மேற்கூறப்பட் நுட்பங்கள் ஊடாக கையாளத்தவறும் பட்சத்தில் கோபம் வருகின்ற போது ஆக்ரோஷமானநிலைக்கு இட்டுச்செல்ல வழிவகுக்கும். மாணவர்களின் கோபத்தினை ஆரோக்கியமான கோபமாக மாற்றி சிறந்ததொரு சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

. . . . . . . . . . . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறாள் விடியலுக்காக

கவியன்னை
-நற்பிட்டிமுனை-

பாவம் செய்யாமல் பழியை சுமக்கிறாள்
கை நீட்டாமல் கடன் கொடுக்கிறாள்.
பூவும் பொட்டும் இருந்தும்
தனி மனிசியாய் போராடுகிறாள்.
கண் மூடி வித்தை காட்டியோ!
கதி கலங்க வைத்தன உறவுகள்

கடல் நீரை விஞ்சும்
கண்ணீர் மழை வந்தும் போராடுகிறாள்.
இன்னல்களை இடித்தெறிய போராடுகிறாள்.
இறுதிவரை போராடுவாள்!

உண்மைகள் அழிந்தால் உலகம் அழியும்
விதியுணர்ந்து விடியலுக்காக போராடுகிறாள்.

தனித்து நின்று போராடுகின்றாள்
தடம் மாறிப் போன வாழ்வினை
தளிர் விடும் தன் உறவுக்காகவே!
தன்னம்பிக்கை ஊட்டியே போராடுகிறாள்.

எதிர்காலம் உனக்கென
எடுத்துவை காலை

எப்போதும் உண்மைகள் அழியாது
காலம் பதில் சொல்லும் கண்ணே!
காத்திருப்போம் விடியலுக்காக!



# மூச்சுக் காற்று

- கி.கிருபைராஜா -
கல்முனை

காற்றே!
ஒரு கணம் உன் மூச்சை நீ
நிறுத்தி விட்டால் இந்த
உலகே இயங்க மறந்து விடும்.

நீயில்லாமல் கடலலை இல்லை
நீயில்லாமல் கன மழை இல்லை
நீயில்லாமல் எந்த சீவராசியும்
இம் மண்ணில் இல்லை

இயற்கையின் தாலாட்டு நீ
இசையின் உயிர்மூச்சு நீ
அசைவின் ஆதாரம் நீ
ஆக்கத்தின் பிறப்பிடமும் நீ

கடவுள் பூமியைப் படைப்பதற்கு முன்
உன்னைப் படைத்திருக்க வேண்டும் - அல்லது
நீயே கடவுளாக இருந்திருக்க வேண்டும்

எமக்குள்ளும்
எம்மைச் சுற்றியும் இருக்கின்ற உம்மை
எம்மால் கண்டு கொள்ள முடிவதில்லை
கடவுளையும்தான்...

நெருப்புக்கு நீ உறவா? பகையா?
நீருக்கு நீ நெருக்கமா தூரமா?
உன் மாறுபட்ட முகங்களில்தான்
எத்தனை மாறுதல்கள்

தென்றலெனத் தாலாட்டும் நீயே
புயலென வந்தெம்மை
கதிகலங்கச் செய்கிறாய்!
உன்னை மாசுபடுத்தியதால்தானே - நீ
ஓசோனில் ஓட்டை போட்டாய்!

அன்னை தந்த சீவனாய்
இன்றும் எனக்குள் இருக்கின்றாய்.
என்னை விட்டு நீ போனால்
மண்ணை விட்டு நான் போவேன்
காற்றே! - நீ
உன் மூச்சை நிறுத்திவிடாதே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை — மு.சடாட்சரன்

# மா நிழல்

எனக்கு எல்லா இரவுகளும் சிவராத்திரிதான். சரிசாமத்தில் படபடப்புச் சத்தம் பாய்ந்து வந்து நெஞ்சைக் குடைந்தது. வருவது வரட்டுமென்று வெட்சீற்றை எடுத்துப் போர்த்தாலும் என்னவிதமாய் போர்வையை ஊடுறுவி குளிர்காற்று வருத்துகிறது.

இந்த வெதவெதப்பின் நடுவில் அந்த ஒற்றை றோசாவின் புன்முறுவல் மட்டுமே ஆறுதல். அவளின் நினைவுப் பூங்காவில் நுழைந்து சுற்றிவருவது இரம்மியம்தான். உறக்கம் தழுவ வெகு நேரம் செல்லும். புரண்டு புரண்டு புழுப்போல் நெழியவேண்டியே இருக்கிறது.

எண்ணங்கள் சங்கிலித்தொடராகி எங்கெங்கோ வெல்லாம் இழுத்துச் செல்லுகிறது. இரவுகள் இப்போது நீளம்தான். உருப்படியான காரியம் எதுவும் நடக்கவில்லை. இப்படியே இழுபட்டால்.

குயில் முட்டையை அடைகாத்து அதன் குஞ்சு இறகசைத்து வித்தியாசமாய் குரல் எழுப்புகையில் விரக்தியில் துடிதுடிக்கும் காக்கைபோல். அவளின் பெற்றோர்கள் கத்தாது விட்டால் போதும்.

சூரியன் சிரித்து மேற்கு காதலியை காணப் புறப்படுகிறான். அம்மாவின் ஆரவாரம்தான் என்னை எழுப்பிவிட்டது. பல்லைத்தேய்த்து முகம் கழுவிய கையோடே செக்கிங், சுற்றி வளைப்பென்று பார்காமல் பால் வாங்கப்போக வேண்டும். அதைக் கொண்டுவந்து கொடுத்ததும் ஈரல் வாங்க இறைச்சிக் கடைக்கு ஓட வேண்டும். கொஞ்சம் பிந்தினால் வெறுங்கையோடே வீடு வந்து தங்கையின் கோபத்துக்கு ஆளாகவேண்டி வரும்.

தங்கைக்கு ஈரல் கறிதான் விருப்பம். இரத்த புஸ்தியும் காணாதென்று டாக்டரும் அள்ளிவைத்து விட்டார். சனிக்கிழமைதான் ஊண்டி ஒரு புடி புடிக்கலாம். எவ்வளவுதான் புடித்தாலும் என்ர உடம்பு காத்தாடிக் கம்பாத்தான் இரிக்கு.தங்கை நல்லா மதாளித்துப் போனாள். இன்னும் நாலைந்து மாதத்தால் முதல் பேரனையோ, பேத்தியையோ தந்திடுவாள். அவள் களைக்காமல் இருக்கவேண்டும் என்பது அம்மாவின் ஒரே ஆசை. அதற்கு குறுக்கே நின்றால் பாவம் பழிக்கு நான்தான் ஆளாகவேண்டும்.

அத்தானும் கொழும்பிலிருந்து மாதத்துக்கு ஒரு தரம் திராட்சை, அப்பிள் என்று சுமந்து வருகிறார். அவர் வந்தால் வீடு கலகலப்பாகிவிடும். தங்கையின் முகத்தில் புதுப்பொலிவு பிரகாசிக்கும். பெட்டிப் பாம்பாய்க் கிடந்தவள் வகை வகையான அலங்காரங்களோடு பூனைக் குட்டி போல் செயற்படுவாள். வீட்டில் பெரிய குதுகலம்தான். அயலவர்களும் வந்து வந்து போகின்றனர்.

எனக்கும் அவள் கிடைத்து விட்டால் முயல் குட்டியாக மாறுவாள். அவளின் தாயும் பூரித்துப்போவாள். அங்கே பாலுக்குப் போன நாட்களில் "வாங்க தம்பி இருங்க என்று என்ன ராஜ மரியாதை.

எனது பாமினியும் தாயாகத் தொடங்கினால் ஈரல் தேவைப்படும். உருளைக் கிழங்கு போடாமல் தனி ஈரலைத்தான் சமைக்கச் சொல்வேன். இருள் பிரியமுன் ரீயுசனுக்கு ஓடும் பிள்ளைகளோடு நானும் ஈரலுக்கு ஓடிப்போவேன். அப்பொழுது என் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது.

பதினொரு வருசத்தால் பென்சனுக்குப் போறவன் என்று கூட பார்க்காமல் என்னைத்தான் அம்மா ஒட்டம் காட்டுறாவு. எல்லோருக்கும் நான் சின்னப் பொடியன் என்ற எண்ணம்தான். அத்தானுக்கும் பேப்பர் வாங்க நான்தான் தேவைப்படுகிறது. கூட்டாளிமாரும் "என்ன மச்சான் நீ இளமையாத்தானே இருக்கிறா பென்ஷனுக் கெண்டாலும் ஒரு குமருக்குக் கை கொடு மச்சான் என்றுதானே சொல்கிறார்கள்.

கன்னக் கதுப்புகளில் இரண்டொரு வெள்ளை தலைநீட்டினால் என்ன? நான் சிமாட்டாத்தானே இருக்கிறன். முன்னுக்கு நாலு வெள்ளை தெரிந்தால் மதிப்புத்தான். ஒவ்வொரு நாளும் மூன்று கேம்புகளைத் தாண்டித்தானே பாடசாலைக்குப் போறன். அக்கோடுகளும் எனக்குப் பாதுகாப்புத்தானே.

அந்த புஸ்பா ரீச்சர் எவ்வளவு ஆசையா இருந்தாள். இரண்டாண்டுகளாகக் கட்டிய மனக்கோட்டை சுக்கு நூறாய் உடைந்து சாம்பல்மேடாகி பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போகுமென்று கண்டேனா? அவளாள் பட்டமரமான என் வாழ்க்கை பாமினியின் சிரிப்பால் தானே துளிர்க்கத்தொடங்கியது. அது தானே என்னை வாழவைத்த சஞ்சீவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுகி பஸ்சிலே புன்னகைத்து, அன்பொழுகப்பேசி, எனது புத்தகங்களை வாங்கி வைத்திருந்து, குடையைத்தந்து கருத்தக்கொழும்பான் மாமரம் போல என் மனதிலே அழியாத இடம் பிடித்துவிட்டாள். அணையாத தங்கக் குத்து விளக்காய் எனது வழியெல்லாம் ஒளி வீசவே செய்கிறாள்.

எல்லோருக்கும் செல்லப் பிள்ளையாக இவ்வளவு காலமும் இருந்தது போதாதா? எனக்கொரு வீடு, என் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்க ஒரு உள்ளம். கோயிலுக்குப்போய் கும்பிட்டு எனக்காக பிரார்த்தனை செய்ய அவள்தான் தகுதி. இந்த நாட்களில் எங்கேயாவது பிடிபட்டால் அவள் அழுது கொண்டு வந்து எனது கணவனை விடுங்கள் ஐயா என்று கேட்பாள். காணாமல் போனவர் பட்டியலில் பெயரைக் கொடுத்து விரதம் அனுட்டிப்பாள். நான் வெளியாலே வந்திடுவேன்.

பால் வாங்கும் சாட்டில் பாமினி ரீச்சரின் எழில் வதனத்தை லீவு நாட்களிலும் ஒரு தரம் பார்க்க ஆசைதான். போய்க்கேற்றிலே வெல்லைத்தட்டினால்.. ஓடி வந்து குட்மோனிங் சேர் வாங்க என்பாள் என் செல்லம். அப்போது அவள் வதனம் காலையில் இதழ் விரிக்கும் சிவப்பு றோசாவாய் ஜொலிக்கும். அதற்கு ஈடு சொல்ல என்னதான் இருக்கிறது?

முற்றத்தில் குறோட்டன்கள், கனகாம்பரம், செவ்வரத்தை, அந்தூரியம் எல்லாம் இருந்தாலும் அந்த றோசாவைத்தான் உள்ளம் விரும்புகிறது. புது மெருகு குலையாத பட்டுப் போன்ற மேனி, தொட்டால் மென்மை, அந்த ஒற்றை றோசா கொள்ளை அழகுதான்.

விறாந்தைக் கட்டிலே குந்திக் கொண்டு பூச்சட்டியிலே இருக்கும் சிவப்பு றோசாவைப் பார்த்துக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது.

பாடசாலைக்குப் போகும் நாட்களில் நல்லா வெளிக்கிட்டு வெளியேறினால் அந்தச் சந்தியை நோக்கித்தான் கால்கள் நகரும். அவளும் எதிர்பார்த்தது போல் நடந்து வந்து மலர் சொரிவாள். தலைவாரும் போது மடிப்புக் குலையாத வெள்ளைச் சேட்டுக்குள்ளால் வெனியன் தெரியக் கண்ணாடி சொன்ன கம்பீரம் மனதில் தென்புதர நிமிர்ந்து நிற்பேன். தோளில் சிறுபை தொங்க கையில் சாறிக்கேற்ற றோஸ் நிறப் பூக்குடை விரித்துப் பிடித்து ஒய்யாரமாய் அவள் வந்து என் அருகே நிற்பாள்.

அவளை விழுங்கத் துடிக்கும் எனது கண்களுக்கு அவள் பெரு விருந்துதான்.

அந்தச் சந்தியில் ஆங்கிலமும், தமிழும் கலந்து ஜொலிக்கும். எங்கு நிற்கிறோம் என்ற ஞாபகமே இல்லாமல். பேச்சில் இறங்கி விடுவோம். சில ஹொண்டா பைசிக்கிள்கள் எங்களைத் தாண்டும் போது மெதுவாக வந்து உறுமி பெரு மூச்சு விட்டே போகும். பஸ்ஸின் இரைச்சல் கேட்டால்தான் வீதி நினைவுவரும். திடீரென "கெதியா வாங்க சேர்" என்று ஓடித் தொத்திக் கொண்டு என்னை அழைப்பாள். அவள் சீற்றில் அமர்ந்த பின்பு தான் எனக்கு ஆறுதலாய் இருக்கும்.

நேற்றும் எங்களை பட்டினத்தில் கொண்டு தள்ளிவிட்டு சரி பார்ப்போம் என்பது போல் ஒரு கனைப்புக் கனைத்து விட்டுப் போனது அந்த பஸ்.

வீடு திரும்பும் போது அவள் என்னோடுதான் வருவாள். அவளைக் காணாவிட்டால் அடித்தொண்டையெல்லாம் வறண்டுபோகும். ஒரு மாணிக்கக் கல்லை இழந்தவனாய் முகம் சுருங்க ஸ்ருடியோவுக்கு முன்னால் இருக்கும் தேநீர்க் கடைக்குள் புகுந்து புகையொன்றடிக்காவிட்டால் உயிரே போய்விடும் போல் இருக்கும். சிக்கிறட்டை முடித்து விட்டு வெளியே வந்தால் அவளும் வந்து கொண்டிருப்பாள். அவளைக்காண தெம்புவரும். இருவரும் பஸ் ஏறி வீடுவரும் போதும் சிரிப்பும் கொண்டாட்டமும்தான்.

அவள் சிரிப்பதும் உப்புச் சப்பற்ற கதைகளில் பெரிய சந்தோசம் அடைவதும் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். எங்களை ஏற்றும் பஸ் சுணங்கி வரட்டுமென்று நினைத்தால் அது கெதியாகவே வந்து விடுகிறது. அதனை மனதுக்குள் திட்டாத நாட்களே இல்லை.

அந்த றோசாவை சீற்றில் இருத்தாட்டிப் பக்கத்தில் நின்றுவருவதில் எனக்கு பரமதிருப்திதான். அவ்வேளை பழைய சங்கப்பாடல் நினைவுக்கு வரும். பாலை நிலத்துச் சுனை ஒன்றில் சொற்பமாய் உள்ள நீரை தன் பிணை மான் பருகித் தாகம் தீர்க்கட்டுமென்று தனது வாயை நீரில் வைத்து தானும் குடிப்பது போல் பாவனை பண்ணி நின்ற கலைமானின் உள்ளம் எனக்கும் வந்து விடுகிறது. அவளுக்கு உதவுவதில் உள்ள திருப்தி வேறொன்றிலும் இல்லை. அவள் எனக்கு சொந்தம் ஆகாவிட்டால் நிழலில்லா வாழ்க்கைதானா?

"தம்பி என்ன நீ விறாந்தைக் கட்டில் இருந்து கொண்டே கனநேரமாய் யோசிக்கிறாய்?....என்ன இண்டைக்கு லீவு நாளெண்டா பாலுக்குப் போறல்லயா?கெதியாப்போ"

என் நினைவுச் சங்கிலியை துண்டித்து விடுகிறாள் அம்மா. மனம் எங்கோ நழுவிப்போகிறது. பாமினியும் நழுவிவிடுவாளோ? சரிம்மா போய் வாங்கிற்று வாறன் என்று வெளிக்கிட்டேன். வெடிச்சத்தங்கள் படபடவெனக் கேட்கின்றன..ரீச்சரிட வீடென்றால் பயமில்லை.. ரீச்சர் என்னை நிச்சயம் காப்பாற்றுவா. பைசிக்கிள் விரைவாய் ஓடுகிறது.

அந்தச் சந்தியில் மேற்குப் புறத்தில் பெரிய குளம். அதைத்தாண்டி பரந்த ஆறு. ஒரே வெள்ளம் கடலாய்த் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் பஸ்சுக்காக காத்து நிற்கையில் அந்த ஆற்றையே பாமினி நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு நின்றா. "என்ன வெள்ளத்தையே பார்த்துக் கொண்டே நிற்கிறீங்க" என்றேன். "இல்ல சேர் இந்த ஆற்றிலே பாய்ந்து விரைவாய் நீந்திக் கடந்து அக்கரைக்குப் போகவேண்டும் போல இருக்குபாயட்டா.."என்றாள்.

"ஓ..பாயுங்க..பின்னாலே நானும் பாய்ந்து நீந்தி வாறன். உங்களுகு துணையாக ஆபத்தென்றால் தூக்கி கரைசேர்ப்பேன்" என்றதும் "சரி.. சரி" என்று சிரித்துக் கொண்டே இருந்தாள். அப்போது அவள் முகத்தில் பெரிய ஆனந்தம் பொங்கிற்று.

பைசிக்கிளுக்கு முன் என் மனம் அவள் வீட்டுக்குப் போயிற்று. இரவெல்லாம் அவளும் கண்விழித்திருப்பாள். முகம் சற்று ஊதி இருக்கும். இரவு கேட்ட வெடிசத்தங்களால் அவள் மனம் நொந்திருப்பாள் என்றாலும் எனக்காக பால் கறந்து துப்பரவாக வைத்திருப்பா அந்த வீட்டுப் பாலில்தான். அம்மாவுக்கும் நம்பிக்கை கொஞ்சமும் தண்ணீர் இல்லை என்பா.

ரீச்சர் நேர்மையான பெண் என்று அம்மாவுக்கு எப்படி விளங்கவைப்பது.? முன்னால் பைசிக்கிளில் வரும் ஒருவர் "பெருங் கூட்டமா நடந்து வாறாங்கள் கவனம்!" என்று



சொல்லிக் கொண்டு பறந்து போகிறார். என்னசெய்வது? கடவுள் என்னைக் காப்பாற்றுவார். அவர்களுக்கு தமிழன் என்றால் கோபம்தான்.

ஓம் அதோ பச்சை,மஞ்சள் குறோட்டன்கள் அசைந்து வருகின்றன. வாகனங்களும் உறுமிக் கொண்டு விரைந்து வருகின்றன. கிட்ட வந்து விட்டார்கள். திரும்பிப்போகவும் முடியாது. பாமினியின் கேற்றைத் தள்ளிக்கொண்டு விரைவாய் உள்ளே நுழைகிறேன். அவர்கள் என்னைக் கண்டுவிட்டனர்.

"அடேய்.. அடேய்"என்ற சத்தம் கேட்கிறது. எனக்கு நூறு வயது ரீச்சர் என்னைக் கண்டதும் வாங்க வாங்க என்று துரிதப்படுத்தினாள். நான் பைசிக்கிளை வைத்து விட்டு மண்டபத்துள் ஏறிக் கதிரையில் இருக்கிறேன். பின்னால் ஓடிவந்த மூன்று பேர் கதவடியில்வந்து "ஏய் வந்த ஆள் எங்க?" என்கிறார்கள்.

எனது நெஞ்சில் தண்ணீயே இல்லை.

"உள்ளே இருக்கிறார் அவர் எங்கட ஆள்தான்"என்கிறார். ரீச்சர்.

"ஆளவரச் சொல்"

நான் வெளியே வருகிறேன்.

"ஏய் அடையாள அட்டையை எடு..நீ எந்த ஊர்?"

அடையாள அட்டையை நீட்டி நான் இந்த ஊர்தான் என்கிறேன்.

"இம் எங்களைக் கண்டு ஓடிவந்தது தானே..?

"இல்ல மாத்தயா இது என்ற வீடுதான்" என்கிறேன்.

"என்ன இவர் ஆரு? ரீச்சரிடம் கேட்கிறார்கள். எனக்கு தலைவெடிக்கப்பார்க்கிறது. அவளின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளில்தான் என்னுயிர் இருக்கிறது. ரீச்சரும் படாரென்று நான் எதிர்பார்த்ததையே கூறிவிட்டார்.

"இவரு என்ர மிஸ்ரர். அவர் மிஸ்ரர் ஜெயராஜ். நான் மிசிஸ் பாமினி ஜெயராஜ்" எனக்கு உயிரைக்கொடுத்தார் ரீச்சர்.

"ஆ.. சரி சரி அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு வெறித்துப்பார்க்கிறார்கள். நான் தைரியத்தோடு மாநிழலில் நிற்கிறேன். பாமினிக்கு முன் நான் பயந்தவன் என்று காட்டலாமா?

"சரி.. சரி போய் பின்னேரம் வாறநேரம் இங்க இல்லாது போனா தெரியுந்தானே நம்ம திரும்பி வாறது அப்ப அடையாள அட்டைதாறது" அவர்கள் நடந்து போகிறார்கள்.

தப்பிப் பிழைத்தேன் என்று பெருமூச்சோடு உள்ளே வந்து அமர்கிறேன். ரீச்சரின் அம்மா, அப்பா ,பக்கத்தவர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். தண்ணீர் கொஞ்சம் தாங்க ரீச்சர் என்கிறேன்.

ரீச்சர் கொடுத்த பால் தேநீரை வாங்கிக் குடிக்கிறேன். சூடோ, சுவையோ ஒன்றும் தெரியவில்லை. பயப்பிடாதீங்க தம்பி என்கிறார் ரீச்சரின் அப்பா!

"அப்பா சேர்ர வீட்ட பாலைக் கொண்டு கொடுத்திட்டுவாங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இங்கே இருக்கட்டும் அவர்கள் திரும்பி வரும் போது வந்து கேட்பார்கள்.

ஓம் சரிபுள்ள தம்பி நீங்க இருங்க நான் உங்கவீட்ட பாலைக் கொடுத்திட்டு நடந்ததச் சொல்லிறன். புள்ள தம்பிக்குச் சாப்பாடுகொடு" என்று கூறிப்பால் வேக்கைக் கொளுவிக் கொண்டு பைசிக்கிளைத் தள்ளுகிறார்.

"என்ன வீட்டுக்க போய் உடுப்பை மாற்றுங்க என்கிறாள் பாமினி. அவள் முகத்தைப் பார்க்கிறேன். அன்று ரீச்சர் வெள்ளத்தைக் கடக்க நினைத்தபோது நான் கூறியதும் அவளின் முகத்தில் தெரிந்த பூரிப்பும் பொங்கிப்பரவ ரீச்சர் ஓடி ஓடி ஏதோ தயாரிக்கிறா.

நான் வீட்டுக்குள் சேட்டைக் கழற்றி போட்டுவிட்டு அங்கே கிடந்த துவாயை எடுத்துப்போர்த்திக் கொண்டு வாசல் மாநிழலில் கிடந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்து இருக்கிறேன். அக்கம் பக்கத்தவர்கள் வந்து பார்த்துப் போகிறார்கள். மாநிழல் மனதுக்கு ரம்மியம்தான்.

# காட்டில் புதைக்கப்பட்ட கவிதை

--மருதமுனை விஜில்--

பெரு மணலில் உருண்டோடும்
நண்டுகளை ரசித்து
முன்னங் கால்கலை வருடிச் செல்லும்
கடலலையின் உராய்வும்

முற்றம் விழுந்து மின்னிய
நட்சத்திரங்களினூடே
அணில் மாமா வால் உயர்த்தி
பழங்கோதி உதிர்த்து
அருங்கந்து தாவிய ரனையோடும்
மரணித்திருக்க வேண்டும் நாம்

இன்று பயங்காட்டும்
வாழ்வியல் மீதான அந்தரிப்பை
நினைக்கும் போது
அந்தம் குடி கொண்டு
சில்லூரிகள் அடையும் காடுகளில்
பெறுமானமற்று
எறி கொள்ளும் நிலவாய்
வலிதற்றுப் போகிறது
என் கவிதைகள்

மாயைகள் வியாபித்து முளைக்கும்
பூமியாய்
இப் பிரபஞ்சத்தில்
புதைக்கப்படுகிறது மனிதாபிமானம்
அந்தங்களோடு உறைந்து கிடக்கிறது
என் கவிதைகள்
இதனால்தான் காட்டில் புதைத்து விட்டேன்
என் கவிதைகளை

பழங்காலத்து மகா புருஷர்களை
நேரில் தரிசித்து, அவர்களுடன்
உரையாட வேண்டுமா?
நூலகத்துக்குப் போ
-மாசேதுங்-

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ
அதுபோல மனதுக்குப் பயிற்சி
புத்தக வாசிப்பு!
- சிக்மண்ட் ஃப்ராய்ட் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலும் மனிதனும்

- எம்.கே. வேல் -

எந்த மனிதனையும் சூழலே உருவாக்குகிறது. உலகில் தோன்றிய சாதனையாளர்கள் எல்லாம். தங்களுக்கு வாய்த்த சூழல்களின் தாக்கங்களால் உருவாகியவர்களே. ஒருவருக்கு அமைந்த அகப்புறச் சூழல்களுக்குத் தக்கதாகவே பல்வேறு பட்ட ஆளுமை உள்ளவராய் அவர்கள் உருவாகின்றனர். ஆகவே சூழலும் மனித வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை.

மனிதனுக்கு வாய்க்கும் சூழலைப்பற்றி சிந்தித்தால் அதனை அகப்புறச்சூழல், புறச்சூழல் என்று பாகுபடுத்தலாம். ஒரு சிசு உருவாகின்ற போது. தாயின் வயிறும், தாயின் குடும்பமுமே அதற்கு முதற் சூழலாய் அமைகின்றன. அத்தாய் தந்தையின் குணநலன்களுக்குத் தக்கதாகவும் அவ் வீட்டு அங்கத்தவர்களின் நடைமுறைகளுக்கு அமைவாகவும் அக்குழந்தை உருவாகிப் பிறக்கின்றது. பிறந்த அக்குழந்தைக்கு தாய்,தந்தை, சகோதரர்களும் அவ்வீடுமே அகச்சூழலாய் அமைகிறது. அக்குழந்தை வளர்ந்து கல்வி கற்கும் போது அதனுடைய பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அப்பாடசாலையின் பௌதீகவளங்களும் அப்பிள்ளையின் புறச்சூழலாய் அமைகிறது. ஒரு மாணவன் கல்விகற்று தேறும்வரை அவனது வீடும் சுற்றாடலும், பாடசாலையும், அவன்பழகும் நண்பர்களும், ஊடகங்களும் அவனது அகப்புறச் சூழலாய் அமைந்து அவனை உருவாக்குவதில் முக்கியபங்கு வகிக்கின்றது என்பது உண்மையாகும்.

வீடும் சூழலும் கல்விக்குத் தூண்டுகோலாய் அமையுமானால் அவ்வீட்டுச் சிறுவர் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். வீடும் சுற்றுப்புறச் சூழலும் அமைதியற்றதாய் நிம்மதிக்கு ஊறுவிளைவிப்பதாய் இருக்குமானால் அவ்வீட்டுப் பிள்ளை விரக்தியோடும், தாழ்வு மனப்பான்மையோடுமே வளரும். இத்தன்மை பிள்ளையின் சகல வளர்ச்சியையும் பாதிக்கவே செய்யும். வீட்டுக்கு அருகில் சினிமா தியேட்டர்களோ, தொழிற்சாலையோ அமைதியைக்குலைக்குமானால் வீட்டாரின் மூளையையும்,மனநிலையையும் அவைவெகுவாகவே பாதிக்கச்செய்யும். இத்தாக்கங்களால் அவர்களின் வாழ்வு வித்தியாசமாகவே உருவாக வழியேற்படும். ஆதலால் ஒருவரின் எதிர்காலத்தை உருவாக்குவதில் அவனது கிராமத்தின் பங்களிப்பு கூடியளவாகவுள்ளது. அக்கிராம மக்களின் வாழ்க்கை முறைகள் பொருளாதாரவளங்கள், பரம்பரைக்குணவியல்புகள் முதலியனவும் அவனின் வளர்ச்சிக்கு முக்கியகாரணிகளாகவும் உள்ளன.

அத்தோடு அவன் வாழும் நாட்டின் அரசியல் நிலமைகளும் சேர்ந்தே அவனை மொத்தமாக உருவாக்குகின்றது. இதனால் நாட்டின் பொருளாதார அரசியல் நடைமுறைகள் அவனின் புறச்சூழலில் முக்கியபங்கினை வகிக்கின்றது எனலாம்.

ஒரு நாட்டிலே யுத்தமும், வன்செயல்களும் தொடர்ந்து பல வருடங்களாக நடைபெறுமானால் அந்நாட்டு மக்களின் வாழ்வு பின்நிலைக்கே தள்ளப்படும். அந்நாட்டிலே, பஞ்சமும், நோயும் தலைவிரித்தாடி அந்நாட்டு மக்களின் வாழ்வு சீரற்று சிதைந்து போய்விடும். இவற்றை சிந்திக்கவேண்டியது அனைத்து மக்களின் முக்கிய கடமையாகும். எல்லா மக்களுக்கும் வயிற்றுக்கு உணவளிக்கப்படுவதோடு, நிம்மதியும், சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்நாட்டிலே உலகம் விரும்பக்கூடிய வளர்ச்சியும், உற்பத்திகளும் மேலோங்கும்.

ஒரு மனிதன் எதிர்காலத்தில் நற்பிரஜையாக உருவாகுவதற்கு அவனுக்க நல்ல கல்வி வசதி அளிக்கப்படவேண்டும். அத்தோடு மனித உரிமைகளும் மறுக்கப்படாத நிலையில் பூரணசுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவற்றை நிறைவேற்றி வைக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும். அவ்விதம் புறச்சூழல் சீராய் அமையும்போது பல்வேறுபட்ட இனங்களுக்கும், சமயங்களுக்கும் இடையிலே புரிந்துணர்வு ஏற்பட்டு சகலரையும் மதித்து நேசிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதோடு எல்லோரும் அன்னியோன்னியமாகவும், ஐக்கியமாகவும், நிம்மதியாகவும் வாழமுடியும். ஆகவே எமது சூழல்களை அனைவரும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

நல் ஆரோக்கியமான சூழல் அமைந்து தொடர்ந்து நிலைக்குமானால் மக்களின் எதிர்காலம் ஒளிமயமாய் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே நாங்கள் எங்களுக்கு ஏற்றதாய் சூழலை மாற்றிக்கொண்டு நல்லவர்களாய் வாழ முயல வேண்டும். இல்லையே சூழலே மனிதனுக்கு எதிரியாக மாறலாம் அல்லவா?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒளிப்படக்கலை
PHOTOGRAPHY

ச.பா.மதன்

## படப்பிடிப்பு -01

போட்டோவை தமிழில் புகைப்படம் என்றும் அது சார்ந்த கலையை புகைப்படக் கலை என்றும் அக் கலைஞனை புகைப்படக் கலைஞன் என்றும் பன்நெடுங்காலமாக பழகிப்போன எமக்கு ஒளிப்படம், ஒளிப்படக்கலை, ஒளிப்படக் கலைஞன் ஒளிப்படக் கண்காட்சி என்ற செல்லாடல்களை ஏற்றுக் கொள்வதென்பது சற்றுக் கடினமாகத்தான் இருக்கும் என்று எனக்குப் புரிகின்றது. அது புத்திக்குப் பிடிபட்டாலும் மனம் இன்னும் அதை ஏற்றுக்கொண்டபாடில்லை.

இருந்தும் நாம் இத் தொடர் மூலம் பகிர்ந்துகொள்ள இருப்பது புகை சார்ந்த விடயமல்ல என்பதைப் புரிந்து கொண்டால் மேற்குறித்த சொல்லாடல்கள்களைப் புரிந்துகொள்வது ஒன்றும் அவ்வளவு கடினமாக இருக்காது. என்ன, இன்னும் புரியவில்லையா? நான் நேரடியாகவே விடயத்துக்கு வருகிறேன்.




"φωτός" என்னடா Font மாற்றாம விட்டு விட்டார்களா என்று யோசிக்க வேண்டாம். இது கிரேக்க மொழியில் **Photo**. இதன் அர்த்தம் ஒளி. கமரா கூட ஒளியை மையமாக வைத்தே காட்சிகளைத் தன்வசப்படுத்துகின்றது. இங்கு புகைக்கும் இக் கலைக்கும் எவ்விததொடர்பும்இல்லை(?). நிற்க இக்கலையை புகைப்படக் கலை எனப் பயில்வது எங்கனம்? ஆகவேதான் இத்தொடரின் மூலம் உங்களை ஒரு புகைப்படக் கலைஞனாக அல்லாமல் ஒளிப்படக்கலைஞனாக மாற்றலாம் என எண்ணுகின்றேன்.

ஒளிப்படங்களை இரசித்தல் ஒரு தவம். ஒரு தியானம். இரசிக்கும் போது வேறு சிந்தனைகளின்றி மனம் அதிலே ஒன்றித்து விடுகின்றது. எத்தனையோ ஒளிப்படங்கள் இருந்தாலும் சில ஒளிப்படங்கள் மட்டுமே எமது அனுமதியின்றி நம் மனதோடு பசைதடவி ஒட்டிக்கொள்கின்றன. அப்போதுதான் அந்த ஒளிப்படக் கலைஞனை நாம் ஒருகணம் சிந்திக்கின்றோம். உண்மையில் ஒரு ஒளிப்படக் கலைஞன் "இது எனது ஒளிப்படம்" என்று பெருமையாகப் பேசுவதைவிட ஒரு ஒளிப்படம் தான் அதை எடுத்த கலைஞனைப்பற்றி பெருமையாகப் பிறரைப் பேசவைக்கவேண்டும்.

இதையெல்லாம் விட்டுவிட்டு ஒளிப்படம் எடுப்பது எப்படி என்று சொல்லுங்க? என்று இப்போ உங்கள் மனம் காதிற்குள் முணுமுணுக்கலாம். இருந்தும் இத்தொடர் ஆரம்பத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளிப்படம்எடுக்கும்முறைபற்றியோஅதன்நுணுக்கங்கள் பற்றியோ கதைக்க முற்படப்போவதில்லை என்று முன்னரே சொல்லிவிடுகின்றேன்.

ஏனென்றால் ஒரு ஒளிப்படம் எடுக்க முன்னர் நாம் அறியவேண்டிய விடயங்கள் நிறைய இருப்பதாகவே நான் எண்ணுகின்றேன். ஒரு உருவத்தை மாணவன் ஒருவன் பாடசாலையில் களிமண்ணில் செய்வதற்கும், அதே உருவை ஒரு சிற்பி கல்லில் உளி கொண்டு செதுக்குவதற்கும் நிறையவே வேறுபாடுகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இதே வேறுபாடுதான் ஒளிப்படத்திற்கும் - ஒளிப்படக்கலைக்கும். எனினும் ஒரு நூலளவான நுட்பமே இரண்டையும் பிரிக்கிறது.

நீர்வீழ்ச்சியைக் கண்டவுடன் அதற்கு முன் நின்று செல்பி ஒன்று எடுத்து உடனே பேஸ்வுக் இல் போடுவதற்கும், அதே நீர்வீழ்ச்சியை ஒரு ஒளிப்படக்கலைஞன் பல கோணங்களில் அவதானித்து பொருத்தமான ஒளியைப் பெற்றுக்கொடுத்தும் அவ்வொளியை கமரா மூலம் கட்டுப்படுத்தியும் பின் அதனைப் பார்ப்பவர்களுக்கு ஏற்றாற்போல் மாற்றங்களை ஏற்படுத்தியும் அதனை பொருத்தமான அளவில் பொருத்தமான ஊடகத்தில் பிறின்ற் செய்து அதற்கேற்ப சட்டகமிட்டு (Frame) காட்சிப்படுத்துவதற்கும் நிச்சயமாக வேறுபாடு இருப்பதை நீங்கள் உணர்ந்துகொண்ட சந்தர்ப்பங்கள் இருக்கலாம். இதுவரை நீங்கள் உணராவிட்டால் இத்தொடர் உங்களுக்கு அவ்வாறானதொரு அனுபவத்தை ஏற்படுத்த வழிசெய்யும் என்பது எனது எதிர்பார்ப்பு.

ஒரு தனி மனிதன்முதல் ஒரு நாடு வரை அவன் அல்லது அதன் நிலையை மாற்றும் வல்லமை இந்த ஒளிப்படங்களுக்கு உண்டு. இது வெறும் பேச்சு மட்டுமல்ல மிக நீண்ட வரலாற்றுச் சம்பவங்களும் என் இக் கூற்றுக்குச் சாட்சி சொல்லும்.

கமராக்களைப் பற்றிய அறிதலுக்கு முன் கமராவின் ஆற்றல்களையும் அது சமூகத்தில் அல்லது தனி மனிதனில் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் பற்றிய அறிதல் அவசியமானதென எண்ணுகின்றேன். ஏனென்றால் ஆயிரம் சொற்களால் விபரிக்க முடியாத விடயத்தைக் கூட ஒரு ஒளிப்படம் மிக இலகுவாக நமக்கு சொல்லிவிட்டுப் போகிறது. சிறியவர்முதல் பெரியவர்வரை ஒரு புதுப் புத்தகத்தில் உள்ள படங்களை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்த பின்னரேதான் புத்தகம் சொல்லும் கதையைக் கேட்கத் தயாராகின்றனர். அதுவரை அவர்களுக்கு அந்தக் பொக்கிஷம் பற்றி சொல்லும் நபர் நம் ஒளிப்படம் தான்.

ஆக இந்த ஒளிப்படங்களைக் கையாளும் போது நாம் மிகக் கவனமாகவும் சமூகப் பொறுப்புடனும் இருக்கவேண்டும். என்ன? விடயத்தின் முனைப்பகுதி இப்போது உங்களுக்கு ஓரளவு தெரியத் தொடங்கலாம். இந்தப் ஒளிப்படங்கள் வரலாற்றில் ஏற்படுத்திய விளைவுகளையும் தாக்கங்களையும் சொல்லிய பின் ஒரு ஒளிப்படக் கலைஞனின் சமூக வகிபாகம் உங்களுக்கு மெல்ல மெல்லப் புரியத் தொடங்கும். அதன் பின் நீங்கள் எடுக்கும் ஒளிப்படத்திற்கும் இப்போது நீங்கள் எடுக்கும் ஒளிப்படத்திற்கும் நிறைய வித்தியாசங்களும் இருக்கக் கூடும். அது எனது இக் கட்டுரையின் வெற்றியாக கருதுகின்றேன். இத்தொடர் மட்டுமே உங்களை ஒரு சிறந்த ஒளிப்படக் கலைஞனாக்கும் என்றில்லை. இது ஒளிப்படக்கலை பற்றிய தேடலை உங்களுக்குள் ஏற்படுத்த ஏதுவாய் அமைந்தாலும் மகிழ்ச்சி.

அடுத்த இதழில் இன்னும் பேசுவோம்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகப் பெருவாழ்வு மேலோங்கும் நிச்சயமே!

கலாபூஷணம். அ.மு. பாறூக் - மருதமுனை

பிரபஞ்சப் பெரும்பரப்பில் கொடுமைகள் வக்கிரங்கள்
பெருமளவில் நிகழ்வதனை நாமறிவோம் மெய்தானே
இறையச்சம், விருந்தோம்பல் மானிட நேயமும் தான்
குறைவாகிப் போனதனால் நிம்மதியை இழந்தோமே

எங்களின் தாயகமாம் இலங்கை மண்ணிலும் தான்
சிங்கத்தின் பாய்ச்சலாக வன்முறைச் சம்பவங்கள்
உக்கிரமாய் நிகழ்வதனை நாமறிவோம்! மெய்தானே
துக்கமும் , சோகங்களும் சிந்தைக்குள் அடைக்கலமே

புத்த மகான் பூதலத்தில் புண்ணியங்கள் செய்தவரே
நித்திலமாம் வார்த்தைகளால் போதனையும் செய்தவரே
ஆயினும் தான் காவியுடை பௌத்த மஹா பிக்குகளோ
ஓயாது இம் மண்ணில் இடர்களையே செய்கின்றார்

சன் மார்க்கப் பிரசங்கம் வாழ்வுக்கு வலுவூட்டும்
துன் மார்க்கப் போதனைகள் நரகுக்கு வழிகாட்டும்
தங்கம்மா அப்பாக்குட்டி, ஆறுமுக நாவலரும்
பங்கமில்லா வாழ்வோடு சங்கமித்தே கீர்த்தி பெற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை திரேசா சரோஜினி நாயுடுவும்
அன்னை சாரதா தேவியும் மேதினியில்
சொன்னவைகள் அனைத்துமே மாணிக்கக் குவியல்களோ
கன்னலான வார்த்தைகளால் ஆலிங்கனம் செய்தனரே

சீரழியும் கலாசார விளைச்சலினால் தரணியில்
கோரமான நிகழ்வுகளோ உச்ச நிலை கொண்டனவே
வேதங்கள் சாத்திரங்கள் அனைத்தையுமே மறந்ததனால்
வேதனையும் துயரங்களும் இமாலயமாய் ஆகினவே

பரிசுத்த அல் குர்ஆன், பகவத்கீதை, மஹாவம்சம்
பரிசுத்த விவிலியமும் வாழ்வோடு சங்கமித்தால்
அவலங்கள் கீழ்மட்டச் சிந்தனைகள் மாண்டழியும்
குவலயத்தில் பேரமைதிப் பெருவாழ்வு நிச்சயமே!

புண்ணுக்கு மருந்திட்டு வைத்தியம் செய்வது போல்
மண்ணுக்கு மதிப்பளிக்கும் நல்லவைகள் நிகழ்ந்தாலே
வீண் வம்பு வாதங்கள் செல்லாக்காசாகி விடும்
ஆன் மீகப் பெருவாழ்வும் மேலோங்கும் நிச்சயமே

அன்பு உள்ளங்களுக்கு...

இவ்விருந்து இதழின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உங்கள் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன். இவ் இதழின் சந்தாதாரராகி ஆண்டுச் சந்தாவாக ரூபா.500 அல்லது அன்பளிப்புக்களை வழங்கி விருந்து தொடர்ந்து வர ஆதவு நல்குங்கள். விருந்தில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற விரும்பினால் மின்னஞ்சல் முகவரியான sthujiyanthan@yahoo.com அல்லது ஆசிரியர், விருந்துஇதழ், மருதநாயகம்வீதி, பாண்டிருப்பு -2, கல்முனை. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபஞ்சத்தின் வீதிக்காவலன் – ஒளி

- சிறிசரவணா -

இந்த உலகில் / பிரபஞ்சத்தில் ஏன் இவை இப்படி இருக்கிறது என்று நம்மால் சிலவேளைகளில் கேள்வி எல்லாம் கேட்கமுடிந்தாலும், அதற்கான திருப்திப்பட்டுக்கொள்ளக்கூடிய பதிலாக ஒன்று கிடைப்பதே இல்லை. ஆனால் அறிவியலைப் பொறுத்தவரையில் நம்பிக்கையின் அடிபடையில் எதுவுமே முடிவு செய்யப்படுவதில்லை. எல்லாவற்றிற்கும் ஆதாரம் வேண்டும், அல்லது ஆதாரம் இருப்பவற்றை மட்டுமே அறிவியல் ஏற்றுக்கொள்ளும்.

குவாண்டம் இயற்பியல் வரும்வரை, இந்த அறிவியல் தனது இயல்பான ஆதாரம் சார்ந்த முறையிலேயே சென்றுகொண்டிருந்தது. இன்னும் ஒருபடி மேலே சொல்லவேண்டும் என்றால், குவாண்டம் இயற்பியலுக்கு முன்னுள்ள இயற்பியல் கோட்பாடுகள் அனைத்தும், பாரம்பரிய இயற்பியல் (Classical physics) எனப்படுகிறது. இதற்கு காரணமில்லாமல் இல்லை, இந்த குவாண்டம் இயற்பியல் அவ்வளவு வித்தியாசமான கோட்பாடுகளை இந்த இயற்பியலுக்குள் கொண்டுவந்து புகுத்திவிட்டது. ஆளாளப்பட்ட ஐன்ஸ்டீனே இந்த குவாண்டம் இயற்பியலை ஆரம்பத்தில் எதிர்த்ததற்கு காரணம், அது கொண்டுவந்த "நிகழ்த்தவு" சார்ந்த முடிவுகளே. சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், நீங்கள் கணக்கு போடலாம், ஆனால் கணக்கை தீர்க்கும் போது, ஒரு விடை வருவதற்கு பதிலாக நிகழ்தகவே பதிலாக கிடைக்கும்! குவாண்டம் இயற்பியலை முழுதாக புரிந்துகொள்வதென்பது, கடவுளை நேரடியாக கண்டு தரிசிப்பதற்கு சமமாகும் என்பதை சொல்லிக்கொண்டே, இனி விடயத்துக்கு வருவோம். (குவாண்டம் இயற்பியலை பற்றி கட்டாயம் விரிவாக பிறகு பார்ப்போம், அப்போது கடவுள் கண்முன் தெரிந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல!)

இந்தப் பிரபஞ்சத்தில் பல விசித்திரமான விடயங்கள் இருப்பினும், அதில் மிக முக்கியமான விசித்திரமான ஒரு வஸ்து — ஒளி. அப்படி என்ன விசித்திரம்? காலைல வருது, சாயங்காலம் போயிடுது என்று நமக்கு சாதாரணமாக தோன்றும் இந்த ஒளி, இன்னும் இயற்பியலால் "பூரணமாக" விளங்கிக்கொள்ளபடாத ஒன்று!

நீங்கள், காரில் பயணம் செய்திருப்பீர்கள், விமானத்திலும் கூட. நம் விண்வெளி வீரர்கள் ராக்கெட்டில் பயணம் செய்து விண்வெளிக்கு சென்று வருகின்றனர். காரை விட விமானம் வேகமாக செல்லும், அதைவிட ராக்கெட் மிக மிக வேகமாக செல்லும். சாதாரணமாக ஒரு விமானம் 800 Kmph வேகத்தில் பயணிக்கும், அதுவே ஒரு ராக்கெட் பூமியின் ஈர்ப்புவிசையை விட்டு சுற்றுப்பாதையை அடைய மணிக்கு 28,968 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்க வேண்டும்!

இப்படியே நமக்கு மிகவேகமாக பயணிக்க முடிந்தால், அதிகபட்சமாக எவ்வளவு வேகத்தில் பயணிக்க முடியும்? வேகத்திற்கு அதிகபட்ச எல்லை என்று ஒன்று உண்டோ அல்லது அது முடிவிலியா?

இங்கே தான் சம்பந்தமே இல்லாத ஒளிபகவான் உள்ளே வருகிறார்! ஆம். வேகத்திற்கு எல்லை உண்டு, அதுவும் இந்த பிரபஞ்சத்தில் மிக மிக வேகமாக பயணிக்கக்கூடியது இந்த ஒளிதான். இதன் வேகம் செக்கனுக்கு 299,792,458 மீட்டர்கள்! இதைவிட வேகமாக இந்தப்பிரபஞ்சத்தில் நாமறிந்த பருப்பொருளால் (matter) ஆனால் எதுவும் பயணிக்க முடியாது. ஏன்? தொடர்ந்து வாசிக்கவும்!

ஆரம்பக்காலங்களில், அதாவது 1600களுக்கு முன் வானியலாளர்களும் அறிவுஜீவிகளும் ஒளியின் வேகம் முடிவிலி என்றே எண்ணினர். அனால் சிலர் மட்டுமே ஒளியின் வேகம் முடிவிலியாக இருக்க முடியாதென


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கருதினர், அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் கலிலியோ கலிலி.

ஒளியின் வேகம் முடிவிலி இல்லை என்று எண்ணியது மட்டுமில்லாது, அதை 1638இல் அளந்து பார்க்கவும் துணிந்தார். இவருடைய ஐடியா எளிமையானதுதான். கலிலியோ அவரது உதவியாளரை, ஒரு தூரத்திற்கு மூடிய விளக்கோடு அனுப்பிவிட்டார். இங்கிருந்து கலிலியோ ஒரு விளக்கைத் திறந்து காட்டி மூடுவார். இந்த வெளிச்சத்தை கண்டவுடன் தொலைவில் இருக்கும் உதவியாளர் அவரது விளக்கை திறந்து காட்டி மூடுவார். கலிலியோ விளக்கை காட்டியதில் இருந்து அவரது உதவியாளர் எவ்வளவு காலம் தாழ்த்தி விளக்கை காட்டுகிறார் என்பதை அளப்பதே கலிலியோவின் திட்டம்! இந்த திட்டம் ஊத்திக்கொண்டதில் கலிலியோவின் தப்பேதும் இல்லை. இந்த திட்டம் வெற்றி அடையவேண்டும் என்றால் அவருக்கு மைக்ரோசெக்கனில் அளக்கக்கூடிய கடிகாரம் இருந்திருக்க வேண்டும். 1600களில் அது சாத்தியமில்லை.

ஆனால் கலிலியோ இந்த ஆய்வு தோல்வியில் முடிந்ததால் ஒளி முடிவிலி வேகத்தில் பயணிக்கும் என்று கருதவில்லை, மாறாக, அது மிக மிக வேகமாக பயணிக்கிறது என்றே கருதினார்.

விதி யாரை விட்டது! 1676இலையே டன்னிஷ் வானியலாளர் ஓலே ரோமர், ஒளியின் வேகத்தை எதேர்ச்சயாக கணக்கிட்டார். அந்தக் காலத்தில் கடலில் பயணிக்கும் மாலுமிகள் நேரத்தை சரியாக கணக்கிட, வியாழக்கிரகத்தின் துணைக்கோள் ஐஓ (Io) வியாழனை சுற்றி வர எடுக்கும் நேரத்தை ஒப்பிட்டு பார்த்தனர். வியாழக்கிரகத்தை ஒருமுறை ஐஓ சுற்றிவர எடுக்கும் நேரம் 1.769 நாட்கள். அனால் இதில் தான் குழப்பம் ஏற்பட்டது!

அதாவது, ஐஓ வியாழக்கிரகத்தால் மறைக்கப்படும் நேரம், ஆண்டின் காப்பகுதிக்கு ஏற்ப மாறுபடுவதை ரோமர் கண்டுபிடித்தார், அதாவது, பூமி சூரியனை சுற்றிவரும் போது, அது வியாழனை விட்டு விலகியும், சிலவேளை வியாழனுக்கு அருகிலும் வரும். இப்படி பூமியானது வியாழனை விட்டு விலகிச்செல்லும் போது, ஐஓ வியாழனால் மறைக்கப்படும் நேரம் அதிகமாகவும், பூமி வியாழனை நெருங்கி வரும்போது, ஐஓ வியாழனால் மறைக்கப்படும் நேரம் குறைவாகவும் இருந்தது.

ரோமர், இந்த நேர இடைவெளிக்கு காரணம் ஒளியின் வேகமே என கருதினார், அதுமட்டுமல்லாது, இந்த நேர இடைவெளியை வைத்து, ஒளியின் வேகத்தை ஒரு செக்கனுக்கு 214,000 கிலோமீட்டர்கள் என கணக்கிட்டும் காட்டினார். (ஒளியின் உண்மை வேகம் ஒரு செக்கனுக்கு 300,000 கிலோமீட்டர்கள்). ரோமர் மிக நெருங்கி வந்துவிட்டார்!

இவ்வாறு பலர் ஒளியின் வேகத்தை கணக்கிட ஆய்வுகள் நடத்தினாலும், முதன் முதலில் அறிவியல் பரிசோதனை மூலம் ஒளியின் வேகத்தை கணக்கிட முனைந்தவர் ஹிப்போளிடே /பிஸீயுபி. 1849 இல் ஹிப்போளிடே ஃபிஸ ீயுபி (Hippolyte Fizeau) என்ற பிரஞ்சு இயற்பியலாளர் மிகத்துல்லியமாக ஒளியின் வேகத்தை ஒரு செக்கனுக்கு 313,300 கிலோமீட்டர்கள் என கணக்கிட்டார். இது ஒளியின் உண்மை வேகத்தின் 5% இற்குள் வரக்கூடிய வேகமாகும் (பலே பாஸ்கரா! அக்காலத்திலும் அவளவு துல்லியம்!).

பலர் முயன்று, கடைசியாக தொழில்நுட்ப வளர்ச்சியை கொண்டு ஒளியின் வேகம் ஒரு செக்கனுக்கு 299,792.458 கிலோமீட்டர்கள் என கணக்கிட்டு விட்டோம்.

ஒளியின் வேகம் வரையறுக்கப்பட்ட வேகமாக காணபடுகிறது. ஏன்? எனபதற்கு காரணம் சொல்ல நாம் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்புக்கோட்பாட்டை நோக்கி பயணிக்க வேண்டும்.

எடக்கு முடக்காக யோசிப்பதில் வல்லவர் நம் ஐன்ஸ்டீன். அவர் பின்வருமாறு சிந்தித்துப் பார்த்தார்.

மிக வேகமாக பயணிக்கும் ஒரு ராக்கெட்டின் முன் ஒரு டோர்ச் லைட் ஒன்றை கட்டிவிடவேண்டும். இப்போது ராக்கெட்டை வேகமாக பயணிக்க செய்து, டோர்ச் லைட்டையும் ஆன் செய்துவிட்டால், இப்போது இந்த டோர்ச்சில் இருந்து வரும் ஒளி, சாதாரண ஒளியின் வேகத்தை விட அதிகமாக இருக்குமா? (ராக்கெட்டின் வேகம் ஒளியின்வேகம்)

இந்த சிந்தனைப்பரிசோதனை ஐன்ஸ்டீனை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தவே, ஐன்ஸ்டீன் இதற்கு ஒரு மிகப்புதிசாலித்தனமான ஒரு கருத்தை முன்வைத்தார் – அசையும் பொருட்கள் ஓடும் நேரத்தின் வேகத்தை குறைக்கிறது! நேரம் என்பது ஒரு மாறிலி அல்ல, மாறாக அது ஒரு நீரோடையை போன்றது, அது வளைந்து, நெளிந்து, வேகமாக, மெதுவாக செல்லக்கூடியது இதுவே ஐன்ஸ்டீனின் சார்புக்கோட்பாட்டுக்கு வித்திட்டது.

வேகத்துக்கும் நேரத்துக்கும் என்னடா சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம், சொல்கிறேன், இப்படி நினைத்துக்கொள்ளுங்கள். அதாவது ஒரு ராக்கெட், ஒரு செக்கனுக்கு 299,792.458 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் போது (ஒரு பேச்சுக்கு), ராக்கெட்டில் உள்ளவர்களது நேரம் துடிப்பது நின்றுவிடும். அதாவது நேரம் ஓடாது! அப்படியென்றால், ராக்கெட்டில் இருபவர்கள் எல்லாம் என்ன சிலை போல் ஆகிவிடுவார்களா? இல்லை!

இங்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது, நேரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஒரு மாறிலி அல்ல, ஆகவே பூமியில் இருந்து பார்பவர்களுக்குதான் ராக்கெட்டில் நேரம் ஓடாதது போல இருக்கும், ராக்கெட்டில் இருப்பவர்களுக்கு அவர்களது நேரம் சரியாக ஓடிக்கொண்டே இருக்கும். நேரம், வேகம் எல்லாம் அதை அளப்பவர்களுக்கு சார்பானது. இப்போது புரிந்திருக்கும் ஏன் ஐன்ஸ்டீன் தனது கோட்பாட்டுக்கு, சார்புக்கோட்பாடு என பெயர் வைத்தார் என்று.

ஆக இந்த ராக்கெட்டில் (ராக்கெட் ஒளியின் வேகத்தில் 99% வேகத்தில் செல்கிறது என்று வைத்துக்கொள்வோம்) ஒருவர், ஒரு வருடம் பயணித்துவிட்டு பூமிக்கு வரும் போது (ராக்கெட்டில் இருப்பவரின் கடிகாரத்தின் படி ஒரு வருடம்). இங்கு பூமியில் பல நூறு வருடங்கள் சென்றிருக்கும்!

சரி, இன்னுமொரு உதாரணத்தை பார்போம். இரட்யர்கள் இருவரில் ஒருவர் விண்வெளி வீரர். அவரை நமக்கு மிக அருகில் இருக்கும் நட்சத்திரமான அல்பா செண்டரி (Alpha Centauri) இக்கு சென்று வர ஒரு திட்டம் உருவாக்கப்படுகிறது. அல்பா செண்டரி, பூமியில் இருந்து 4 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளது. ஆக, பூமியில் இருக்கும் இரட்டையரில் ஒருவருக்கு, தனது சகோதரன் ஒளியின் வேகத்தில் 99% வேகத்தில் அல்பா செண்டரி சென்று வரும்போது 8 வயது கூடி இருக்கும். ஆனால் அந்த விண்வெளி வீரருக்கு? 1 வயதுதான் அதிகரித்திருக்கும்!

இதுவே அந்த விண்வெளிவீரர் ஒளியின் வேகத்தில் 99.999% வேகத்தில் பயணித்திருந்தால், அவர் பூமிக்கு திரும்பி வரும்போது பூமியில் உள்ள சகோதரருக்கு 8 வயது கூடியிருக்கும், ஆனால் அந்த விண்வெளி வீரருக்கோ வெறும் 13 நாள் வயது மட்டுமே கூடியிருக்கும். ஆக, வேகம் அதிகரிக்கும் போது நேரம் என்பதும் மாற்றமடைகிறது.

ஒரு பொருள் ஒளியின் வேகத்தை அடையும் போது அதனது காலம் (நேரம்) நின்றுவிடும். அனால் ஒளியைத் தவிர வேறு திணிவுள்ள எந்தப்பொருளாலும் ஒளியின் வேகத்தை அடையமுடியாது. இதற்கும் விளக்கத்தை ஐன்ஸ்டீனின் பொதுச் சார்புக்கோட்பாடே தருகிறது. அதையும் பார்ப்போம்.

பொதுச் சார்புக் கோட்பாடு நமக்கு என்ன சொல்கிறது என்றால், ஒரு பொருளின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க, அதன் திணிவும் அதிகரிக்கும் அதேபோல அதன் நேரம் துடிக்கும் வேகமும் குறையும். ஒரு பொருள் ஒளியின் வேகத்தை அடைய, அதன் திணிவு முடிவிலியாகவும் அதனது நேரத்தின் துடிப்பு முற்றாகவும் நின்றுவிடும். இதிலிருந்துதான் இயற்பியலின் மிகப்பிரசித்தி பெற்ற சமன்பாடான $E=mc^2$ என்ற ஐன்ஸ்டீனின் சமன்பாடு உருவாகியது.

(E= energy, m= mass, c=speed of light in vacuum)

இன்று வரை நாம் செய்த ஆயிரக்கணக்கான பரிசோதனைகள் மூலம் இது நிருபிக்கப்பட்டுள்ளது.

இன்று நாம் வைத்துள்ள அதி உன்னதமான அறிவியல் சாதனமான துகள் முடிக்கியில் (Particle accelerator) நாம் இலத்திரனை அல்லது ப்ரோதிரனை எவ்வளவு சக்தி கொடுத்து முடிக்கினாலும் அது ஒளியின் வேகத்தில் 99.999% வீதம் வரை மட்டுமே பயணிக்க முடியும். ஒளியின் வேகத்தை அது அடைய நாம் முடிவிலி அளவான சக்தியை அதற்கு கொடுக்கவேண்டும்! அது இந்த பிரபஞ்சத்தில், இயற்பியல் விதிக்குட்பட்டு முடியாத காரியம்.

ஒளியைப் பற்றி சிறிது விளங்கியிருபீர்கள் என்று நினைக்கிறன். ஒளி ஒரு தனி வஸ்து அல்ல, அதற்கும் நேரத்திற்கும், இடத்திற்குமே பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. மேலதிகமாக அறியவேண்டும் எனில், நிச்சயம் நீங்கள் பொதுச் சார்புக் கோட்பாட்டை படிக்க வேண்டும். மீண்டும் வேறொருமுறை ஒளியைப் பற்றி சிறிது ஆழமாக அலசிப் பார்போம்.

## ஒரு மொழியின் ஏக்கம்

*யாரும் புரிந்து கொள்ளத் தெரியாத*
*அந்த மொழிக்கு*
*உரிமைகோரும் இனமொன்று*
*வெறுமையாகவே இருக்கிறது*
*உயிர்குடிக்கும்*
*வன்மையான உச்சரிப்பின் போதும்*
*அந்த மொழிபற்றிய புரிதல்*
*அவர்களைக் காயப்படுத்தவே இல்லை*

*இப்போதெல்லாம்*
*அந்த மொழியில்*
*உணர்ச்சிகளை எழுத முடிவதில்லை*
*அதற்கான வார்த்தைகளைக் கூட*
*அந்த மொழியின் வாசகர்கள்*
*தூறையாடியிருந்தார்கள்*

*அணிகளோ உவமைகளோ இன்றிய*
*நிர்வாணமான அந்த மொழிகூட*
*இப்போதெல்லாம்*
*அதற்கு வருந்துவதே இல்லை*

*இருந்தும்*
*அதற்கான ஏக்கம் ஒன்றுமட்டுந்தான்*
*எப்போதாவது.*
*எங்கிருந்தாவது. வரும்*
*அந்த மொழியை*
*வாசிக்க.. எழுத் தெரிந்த*
*ஒரு எழுத்தாளன் மூலமாய்*
*அழகிய கவிதையொன்றை*
*தனதாக்கிக் கொள்வதுதான்.*

*-சபாபுத்திரன்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரத்தின் உச்சரிப்புகள்

## பாண்டிருப்பில் நடைபெற்ற வாசிப்போம் வளர்ப்போம் இலக்கியக் கருத்தாடல்

பாண்டிருப்பு அகரம் சமூக அமைப்பின் வாசிப்போம் வளர்ப்போம் இலக்கியக் கருத்தாடல் நிகழ்வு பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச்சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

அகரம் செ.துஜியந்தனின் ஒழுங்கமைப்பில் ஈழத்தின் புகழ்பூத்த மூத்தகவிஞர் மு.சடாட்சரன் தலைமையில் இவ் வாசிப்போம் வளர்ப்போம் இலக்கிய நிகழ்வு பி.ப.4 மணிக்கு இறைவணக்கத்துடனும் பாண்டிருப்பு ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.சபாரெத்தினம் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகியது.



சிவஸ்ரீ மு.சபாரெத்தினம் குருக்கள்

இதில் புலம்பெயர் எழுத்தாளர் சட்டத்தரணி பாடுமீன் ஸ்ரீகந்தராசா (அவுஸ்ரேலியா), எழுத்தாளர் எஸ்.அரசரெத்தினம், யோகாதிலகம் கே. சந்திரலிங்கம் ஆகியோர் தங்களைக்கவர்ந்த இலக்கியப் படைப்புக்கள் பற்றியும் தாங்கள் எழுத்துத்துறைக்குள் பிரவேசித்தமை தொடர்பிலும் இலக்கியசுவையுடன் சபையில்பகிர்ந்து கொண்டனர்.



மு. சடாட்சரன்

தலைமை தாங்கிய கவிஞர் மு. சடாட்சரன் "தற்காலத்தில் வாசிப்பு எங்களுக்குப் போதாது. அதனைக்கூட்டிக்கொள்ள நாம் பல்வேறு முயற்சிகளை நடைமுறைப்படுத்தவேண்டும். வாசிப்பின் ஊடாகவே பூரண மனிதனாகலாம், வாசிப்பின் ஊடாகவே அறிவுடைய சமுகத்தை உருவாக்கலாம், வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகத்தைப் புரிந்து அதனோடு சேர்ந்துபோகலாம் தற்கால இலக்கியப் போக்குகளை அறிந்து ரசிக்கவும் சிறந்த நவீன இலக்கியங்களைப் படைக்கவும் வாசிப்பு மிகமிக அவசியம். வாசிப்போம் தமிழ் இலக்கியத்தை வளர்ப்போம். தமிழ் கலைகலாசாரத்தை வளர்ப்போம் தமிழை வளர்ப்போம் நாமும் வளர்வோம். வாசிப்போம் வளர்ப்போம்" எனக்கூறி இலக்கிய நிகழ்வை ஆரம்பித்துவைக்கின்றேன். என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சட்டத்தரணி பாடும்மீன் சு.ஸ்ரீந்தராஜா

புலம்பெயர் எழுத்தாளர் சட்டத்தரணி பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராஜா பேசும்போது...

"தமிழையும் தமிழ் இலக்கியங்களையும் சங்கம்வளர்த்து பாதுகாத்தவர்கள் தமிழர்கள். ஈழத்தில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்ப்பணியை எம்மவர்கள் திறம்படச்செய்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான இலக்கிய நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் எமது அடுத்தசந்ததியினர் மத்தியில் தரமான தமிழ் இலக்கியங்களை படைக்கவும் பாதுகாக்கவும் வழி ஏற்படுத்தப்படும். கிழக்கு மண் தலைசிறந்த படைப்பளிகளை உருவாக்கிய மண் என்னை முற்போக்கு எழுத்தாளர் எஸ்.பொ வின் எழுத்துக்கள் மிகவும்கவர்ந்தவை. தற்கால தமிழ் இலக்கியத்தினை உலக இக்கியப்பந்தலில் ஒய்யாரமாக அமரவைத்த ஈழத்தமிழ் இலக்கியத்தின் இமயம் எஸ்.பொ. அவர் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு எழுத்தாளர். இறுதியாக ஒரு ஆமத்துருவின் காதல் என்ற கதையை எழுதுவதற்கு இருந்தவர் அதற்குள் காலன் அவரைப்பறித்துக்கொண்டான். தமிழ் மொழியைப் பொறுத்தவரை நிறைய நூல்கள் வெளிவருகின்றன அவையெல்லாம் தரமானவையா? என்றகேள்வி எழுகின்றது. காலத்தைக்கடந்த இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். அது ஈழத்து எழுத்தாளர்களினாலும் எதிர்கால சமூதாயத்தாலும் நிச்சயம் முடியும். இப்பொழுது ஊடகங்களும் எழுதுபவர்களும் தமிழ்மொழியை சரியாக எழுதவோ உச்சரிக்கவோ தெரியாதவர்களாக இருக்கின்றனர். சரியென்று எண்ணிக்கொண்டு தவறான சொற்பிரயோகங்களை, தமிழ்மொழியை பயன்படுத்துகின்றனர்.

இதற்குக் காரணம் தமிழ்மொழிப்பயிற்ச்சி மக்களிடையே மிகக்குறைவாக இருப்பதும் ஆங்கிலமொழியின் மீது கொண்ட மோகமாகவும் இருக்கலாம். எல்லோரும் நூல்வெளியிடுவது போல் நாமும் வெளியிட வேண்டும் என நினைக்கக்கூடாது. தரமான நூல்களைப் படைக்கவேண்டும். ஒரு நூலை வெளியிட்டாலும் அது இலக்கிய உலகில் அதிர்வையும்மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும் இப்பொழுது தாங்கள் எழுதுகின்ற கவிதைகள், கதைகள் எல்லாம் கவிதைகள்தானா? கதைகள்தானா? என்று தெரியாமல் பணம் இருந்தால் நூல்வெளியிடலாம் என்கிற நிலையிருக்கின்றது. எல்லோரும் நூல் வெளியிடலாம். முதலில் அவர்கள் தமிழ்மொழியில் பயிற்ச்சி பெறவேண்டும். மொழிப்பயிற்ச்சி மிக முக்கியமானது. தமிழ்மொழியில் சரிவர எழுதவேண்டும். பலஉன்னதமான இலக்கியங்களை யார்த்தமொழி. பல மொழிகளை உருவாக்கிய மொழி. அப்படிப்பட்ட மூத்தமொழியை, வளமான மொழியை தாய்மொழியாகக் கொண்டிருக்கும் தமிழர்கள் அம்மொழியை மேலும் வளர்ப்பதற்கு தங்களாலான முயற்சியைச் செய்யவேண்டும். முன்பு ஈழத்தமிழ் அறிஞர்கள் இந்தியாவிற்குச் சென்று இந்திய அறிஞர்களுக்கு கூட தமிழ் கற்பித்திருக்கின்றார்கள். அவர்களில் முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர். ஈழத்தமிழ்மக்களாகிய நாம் மொழியின் பெருமையை கட்டிக்காக்கவேண்டும்.

இளம் சந்ததியைப் பொறுத்தவரை வாசிப்புப்பழக்கம் வெகுவாக குறைந்து விட்டது. அவர்களிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் குறைந்து விட்டது. தமிழ் மொழியை பல்கலைக்கழகம் சென்றுதான் கற்கவேண்டியதல்ல நல்ல நூல்களை வாசிக்கப்பழகிக் கொண்டால் தமிழ்மொழி கைவரப்பெறும் எவ்வளவுக்கு வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு தமிழ்மொழியில் வளத்தைக்கூட்டும். பிள்ளைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை பெற்றோர்களும் தூண்டவேண்டும்.

இப்போது இவ்வாறான வாசிப்போம் வளர்ப்போம் இலக்கியநிகழ்வினைசெய்கின்றஅகரம்அமைப்பின் உன்னதமான முயற்ச்சிகள் பாராட்டத்தக்கன. இதில் பல எழுத்தாளர்களையும் இணைத்துக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கும் வாசிப்புப் பழக்கத்தை கூட்டுவதற்கான முயற்சிகளை இந்த அமைப்பு செய்யவேண்டும்" என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எழுத்தாளர் எஸ்.அரசரெத்தினம் பேசும் போது...

“தரமான படைப்புக்கள் மக்கள் மத்தியில் என்றும் பேசப்படும் . சமூகத்தோடு ஒன்றித்து எழுதவேண்டும். எழுதுவது பெரியவேலையல்ல. வாசிப்பு இருந்தால் எழுதத்தூண்டும். எம் சமூகத்திலே ஏராளமான கதைக்கான கரு தாராளமாக இருக்கின்றது. வலிந்து எழுதுவது எழுத்தல்ல இது வசப்படவேண்டும். கல்முனைப் பிரதேசம் பல கலை இலக்கியவாதிகளை கண்டபிரதேசம். கவிஞர்களான நீலாவணன், பாண்டியூரான், சண்முகம் சிவலிங்கம், சடாட்சரன், பிரபல எழுத்தாளர் உமாவரதராஜன் போன்ற உலகறிந்தவர்களை தந்த மண். இம்மண்ணில் இவ்வாறான இலக்கியநிகழ்வுகள் அன்றுதொடக்கம் இன்று வரை தொடர்வது வரவேற்கத்தக்கது.


எழுத்தாளர்.எஸ்.அரசரெத்தினம்

இன்று நவீன சாதனங்களின் வருகையினால் வாசிப்பு குறைந்துவிட்டது. குறிப்பாக இளம் பிள்ளைகளின் நேரத்தை கைத்தொலைபேசிகள் ஆக்கிரமித்துள்ளது. இதில் தேவையில்லாத விடயங்களைத் தேடி தமது எதிர்காலத்தை வீணடித்துக்கொண்டிருக்கின்றனர். பிள்ளைகள் கெட்டுப்போவதற்கு மறைமுகமாக பெற்றோர்களே காரணமாக இருக்கின்றனர். பிள்ளை வளர்ப்பு என்பது அடுத்த சந்ததிக்கு ஒரு சவாலாக இருக்கப்போகிறது.

இதுவரை 5 நூல்களை வெளியிட்டுள்ளேன். எனது சாம்பல்பறவை நாவலுக்கு கிழக்கு மாகாணவிருதும் கிடைத்திருந்தது. இதுமட்டுமல்ல தேசியரீதியிலும் விருதுகள் கிடைத்துள்ளன. தமிழ் எழுத்தாளர்கள் சத்தமில்லாது பல சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்களது எழுத்துப்பணிகள், இலக்கியப்பணிகள் ஊடகங்களில் அதிகமாக வெளிவருவது குறைவாகவேயுள்ளது. சிலர்பேரளவில்நூல்ஒன்றை வெளியிட்டு ஒரு கடை முதலாளிக்கு அல்லது அரசியல்வாதிக்கு முதற்பிரதியை வழங்குகின்றனர். வாசிப்போடு எழுத்தோடு தொடர்பில்லாத ஒருவருக்கு நூல் ஒன்றை வழங்குவதால் எவ்விதபிரயோசனமுமில்லை. எழுதப்படுகின்ற எமது நூலகள் வாசிக்கப்படவேண்டும். அதுவே ஒரு எழுத்தாளனுக்கு ஆத்ம திருப்தியைக்கொடுக்கும்” என்றார்.


யோகாதிலகம் கே.சந்திரலிங்கம்

யோகாதிலகம் கே.சந்திரலிங்கம் பேசும்போது...


“அகரம் அமைப்பின் வாசிப்போம் வளர்ப்போம் இலக்கியச் சந்திப்பு தொடர் நிகழ்வாக நடைபெற்றுவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இலக்கிய உலகில் தரமான ஆன்மீக நூல்களும் வெளிவந்த வண்ணமுள்ளன. பக்தி இலக்கியங்களும் எமது எழுத்தாளர்களால் எழுதப்பட வேண்டும். இப்போது எவரும் பக்தி இலக்கியங்களை எழுதுவதில்லை. இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் தறிகெட்டு செல்லும் இளையசமுதாயத்தை நல்வழிப்படுத்த ஆன்மீக பக்தி இலக்கியங்களும் படைக்கப்படவேண்டும்” என்றார்.

கல்முனைப்பிரதேசத்தில் மிக நீண்டகாலத்திற்குப்பின்னர் தமிழ்படைப்பாளிகள் இலக்கிய ஆர்வலர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். இதில் மட்டக்களப்பு தேசியகல்விக்கல்லூரி உபபீடாதிபதி கு.துரைராஜசிங்கம், முன்னாள் மாவட்டகாணிப்பதிவாளர்-எழுத்தாளர் உமாபதி, கவிதை-சிறுகதைப் படைப்பாளிகளான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.திவாகரன், வை.சுந்தரராஜா, சிவகுருநாதன், கி.கிருபைராஜா, த.சிவனேசன் , மாணவமீட்பு பேரவை தலைவர் எஸ்.கணேஸ், மாணவர் உளவளத்துணை ஆலோசகர் கா.சாந்தகுமார், மத்தியஸ்தசபை உறுப்பினர் இ.சந்திரசேகரம், ஒய்வு நிலை அதிபர்களான இ.இராசரெத்தினம், வே.தங்கவேல், ஓய்வுநிலை சமூகசேவை உத்தியோகஸ்தர் க.வேதநாயகம், மருந்தாளர் எஸ்.விஸ்ணுதாசன், இலக்கிய ஆர்வலர்கள் செ.காந்தரூபன், க.கமலதாசன், வ.டினேஸ், கே.தில்லைநாதன், ம.கிரிசாந், தி.லிங்கன்கோணநாயகம், சீ.கோபாலபிள்ளை, கிராமசேவையாளர் எஸ்.அருள்ராஜா, ம.கலாயினி, து.அமுதா, கே.சந்திராதேவி, ச.நிர்மலா, சாந்தி, பி.ஜெயா, உட்பட மாணவர்கள் பலர் இவ் வாசிப்போம் வளர்ப்போம் இலக்கியக் கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

-ஆசிரியர்-



## காதக்காட்டுங்க சொல்லுறன்... -அலசல் அப்புசாமி-

**உனக்கொரு விசயம் தெரியுமாடி விமலா!... எனக்கென்ன தெரியும் டீ கமலா வீவீசி போல ஊருக்க கிடக்கிற எல்லாத்தையும் நீதான் கொண்டுவருவா! விடிஞ்செழும்பி வீட்டு வேல செஞ்சி நாலு நாடகம் பாக்கிறதிலே எண்ட பொழுது கழிஞ்சி போகுது. இந்த நாடகத்தப் பாத்து என்ன செய்யப் போறா? நாடகத்தப் பாத்துத்தான் பல குடும்பம் நாசமாப் போய்க்கிடக்கு! ஊருக்க நடக்கிற புதுனத்தத்தானே நாடகத்திலயும் காட்டுறாங்க... நாடகத்தில பாக்கிறத்தவிட சில விசயங்கள நேறில பாக்கிறதே தனி சுகம். இப்ப நீ என்ன சொல்ல வாறா? அப்புடி என்ன புதுனத்தக் கண்டநீ? உனக்குத் தெரியாதா? நம்மட அடுத்த ரோட்டில இறிக்கிற அரியமக்காட்ட ஆறு மாசத்துக்கு முந்தி பக்கத்தூட்டுப் பாக்கியம் அவட வீட்ட வந்து கலியாண வீட்ட போட்டுப் போறத்துக்கு கொஞ்சம் உங்கட காப்பு மாலையத் தாங்கக்கா எண்டு கேட்டிருக்காள், இனி அந்த மனிசியும் மனசெறங்கி புருசனுக்குத் தெரியாம கழுத்தில கையில கிடந்தத கழட்டி கெதியா கொண்டாடியம்மா எண்டு குடுத்திறிக்காவு. எல்லாம் ஒரு மூணு பவுண் இருக்குமாம்... இதென்ன பெரிய புதினமா ஒரு மனிசன் உதவிகேட்டா செய்யுறது வழக்கம்தான், நல்லது கெட்டதுக்கு ஒரு இடத்தில போக்குள்ள கழுத்தில கையில ஏதாவது மின்னத்தானே வேணும். அவள் பாக்கியத்திட்ட நகநட்டு இல்லபோல அதான் அவட்ட கேட்டிருக்காள்... இஞ்ச! எண்ட கதய முழுசா கேக்கோணும் முந்திரிக்கொட்ட மாதிரி முந்தக்கூடா... ஆ...சொல்லுபாப்பம்.. அரியமக்கா நகயகுடுத்து இப்ப ஆறுமாசமாகுதாம் இன்னும் அவட்ட நக வந்து சேரல்ல... அவவும் இத எத்தின நாளைக்கு புருசனிட்ட மறைக்கிறது. பாக்கியத்ததேடி வீட்ட போனா அங்க இருக்கிற புள்ளையள் அம்மா வீட்ட இல்ல... அம்மா கடக்கி போயிருக்காவு எண்டு சொல்லுதுகளாம்... அரியமக்கா இடயில ஒருதரம் புள்ளையார் கோயிலடில வெச்சி சந்திச்சிருக்காவு. அவவக் கண்டு பாக்கியம் மறுகித்துப் போயிருக்காள். இவ போய் மறிச்சி நகையக் கேட்டிருக்காவு நாளைக்கு வீட்ட வாதாறன் எண்டுத்து போயிருக்காள். இவவும் போயிருக்காவு. அப்ப ஒரு வேங்கில ஈடுவெச்ச துண்டொண்டக் கொடுத்து உண்ட நக இங்கதான் இருக்கி தேவண்டா போய் மூண்டெடு எண்டு முகத்திலடிச்சமாதிரி சொல்லிருக்காள். பாவம் மறுவார்தைக்கு ஒருவார்த பேசத் தெரியாத மனிசி அவ... குழறித்து வீட்ட வந்து சேந்திருக்காவு. என்ன சாதி வேல எண்டு பாரு மச்சாள். இவளெல்லாம் ஒரு பொம்புளையா? இப்ப அரியமக்கா இணக்கசபயும் பொலிசுமா திரியிறாவு... இப்ப ஒருவரையும் நம்பேலாமக் கிடக்கு..... சொல்றத சொல்லியிருக்கன். இனி உங்கட புத்தி.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழக் கூத்தரங்கத்தில் எம்மவர்களின் சிந்தனைகள்

துறையூர் தாஸன்

ஏறத்தாழ கி.பி 250 க்கு முற்பட்ட காலத்திலேயே கே ாடியர்,வயிரியர்,கண்ணுளர்,பொருநர் போன்ற கூத்தர் குழுக்கள் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கிய பாடல்களுக்கூடாக அறியமுடிகிறது.அதாவது கூத்தர்கள் சங்க காலத்திலேயே ஆற்றுகை செய்துள்ளனர் என்பதற்கான சான்றாதாரங்கள் திருமுருகாற்றுப்படை, கலித்தொகை தவிர்ந்த ஏனைய பதினைந்து கீழ்க்கணக்கு பாடல்களுக்கூடாக திறமான தடயங்களை பெறமுடிகிறது.சான்றாக அகநானூறில் வாத்தியக்கருவிகள் பற்றியும், புறநானூறில் அளிக்கை நிகழ்ந்ததை பற்றியும்,பட்டினப்பாலையில் மேடையமைப்பு பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.

இந்நூல்களுக்கூடாக கூத்துக்களங்கள், கூத்தாற்றுகைகள் நிகழ்ந்துள்ளன என்பதை அறுதியிட்டுக்கூறமுடியும். பன்னெடுங் காலமாக ஆடப்பட்டுவரும் ஈழக்கூத்தானது சுமார் 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து தான் ஆடப்பட்டு வந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரமாக ஈழத்தின் முதல் கூத்துப் பனுவலான கணபதி ஐயரின் (1709 - 1784) வாளபிமன் கூத்துப்பிரதியை ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

மரபுவழிக்கூத்தின் அடிப்படையை வைத்துக்கொண்டு 1960ஆம்ஆண்டுகாலப்பகுதியில்செம்மையாக்கம்என்ற பெயரும் அதனைத் தொடர்ந்து சிற்சில மாற்றங்களுடன் சமூக உள்ளடக்கத்துடனும் வளர்ச்சியடைந்து வரும் வேளையில் 2002 ஆம் ஆண்டிலிருந்து மீளுருவாக்கம் எனும் பரிமாணத்துடன் கூத்தரங்கானது அன்றாடச் செயற்பாடு சார்ந்து நிகழ்த்தப்பட்டவண்ணமுள்ளது.

இவ்வாறு கூத்தரங்கானது இற்றை வரைக்கும் இரு பரிமாணம் பெற்று விளங்கினாலும் ஊர்களில் ஆடப்படும் மட்டக்களப்பு தென்மோடி, வடமோடி கூத்தரங்கானது இற்றைவரைக்கும் எந்தவித பிசகுமின்றி ஆடப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் பிரதேச வடமராட்சியில் காத்தான்கூத்தும் பருத்தித்துறையில் நாட்டைக்கூத்தும் ஏனைய தென்மோடி, வடமோடி, மகிடிக்கூத்து என்பனவும் நிகழ்த்தப்பட,வன்னியில்கோவலன்கூத்தும் காத்தான்கூத்தும் தென்மோடிக்கூத்தும் ஆடப்பட மன்னார் பேசாலையில் உடக்குபாஸ் கூத்துடன் ஏனைய வாசாப்பு, வடபாங்கு, தென்பாங்கு என்பனவும் பயில்நிலையிலுள்ளன.

மலையகப் பெருந்தோட்டங்களில் காமன்கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் போன்றனவும் ஆடப்பட்டவண்ணமுள்ளன. சிற்சில இடங்களில் ஐரோப்பியர்களின் வருகை (1505 -1948) காரணமாக கூத்துக்கள் பாரம்பரியக்கூத்துக்குரிய அடிப்படை இயல்புகளை இழக்கலாயின.

இலங்கையின் பல பாகங்களிலும் ஆடப்பட்ட கூத்துக்கள் ஆரம்ப காலங்களில் இந்து இதிகாச,புராணக் கதைகளை அடிப்படையாக்கொண்டிருந்தது. ஐரோப்பியர்களின் வருகையினால் இலங்கையின் யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகள், மன்னார்ப்பகுதி, சிலாபம், நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களில் ஆடப்பட்ட கூத்துக்கள் கத்தோலிக்கக் கதைகள், கத்தோலிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்கள், மதப்பிரச்சாரம் சார்ந்து அமைந்திருந்தது. "கத்தோலிக்க மதகுருமார்களுக்கு ஆட்டமுறைகள் சிக்கலாகயிருந்ததன் காரணமாக வட்டக்களரியையும், ஆடலம்சங்களை விடுத்து பாடலில் அதிக கவனம் செலுத்தினர். மன்னார் பகுதியில் ஏறத்தாழ 150 க்கு மேற்பட்ட கிறிஸ்தவ கூத்துப்பிரதிகளும், யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க செல்வாக்குமிக்க இடங்களில் 1810 - 1915 வரைக்குமான காலப்பகுதிக்குள் 74 கூத்துக்களும் ஆடப்பட்டதாக மு.சி.ஆசிர்வாதம் தாம் எழுதிய நூலொன்றில் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து பாரம்பரிய ஆட்டக்கூத்தின் தன்மையை அதன் தனித்துவத்தையும் உயிர்த்துடிப்பையும் (வட்டக்களரி) மேற்கத்தேயர் அறிந்ததைக் கூட எம்மவர் பலர் 1962-1998 காலப்பகுதிவரை அறிந்திருக்கவில்லை என்பது கவலைக்குரியதே.

கூத்து, கூத்தரங்கத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டே செம்மையாக்கம், சமூக உள்ளடக்கம், மீளுருவாக்கம் என்ற சிந்தனைகள் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள எம்மவர் மத்தியிலிருந்து தோன்றிய கொள்கைகளாகவுள்ளன. ஈழத்திலே பயில்நிலையிலுள்ள கூத்து மரபானது பிரதேசத்துக்கு பிரதேசம் ஆடல், பாடல், மேடையமைப்பு, அவைக்காற்றுகை முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு பிரதேசங்களில் தத்தமக்குரிய இயல்புகளை உள்வாங்கி இன்றுவரை நிகழ்த்தப்பட்டவண்ணமுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாழும் குறிப்பாக மட்டக்களப்புத்தமிழர் மத்தியிலே ஆடப்படும் பறைமேளக்கூத்து, மகிடிக்கூத்து, வசந்தன் கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து போன்றவை அன்றிலிருந்து இன்று வரைக்கும் பாரம்பரிய முழுமையினை பின்பற்றி ஊர்களிலும், நகர்ப்புறங்களிலும் ஆடப்பட்டு வருகின்றன. இத்தன்மையினை ஏனைய பிரதேசக் கூத்துக்களில் காணமுடியாதுள்ளது. கூத்தரங்குகளை மரபுவழிக் கலையெனவும், பாரம்பரியக்கலையெனவும், உயிரணுவின் அரங்க வடிவங்கள் எனவும் அழைக்கலாம்.

இலங்கை அரங்க வரலாற்றில் கலாசார அமைச்சின் கீழ் கலைக்கழகம் 1956 இல் நிறுவப்பட்டதோடு அதன் தலைவராக கந்தசாமி கணபதிப்பிள்ளை விளங்க 1957 - 1974 வரையான காலப்பகுதியில் தலைவராக சு.வித்தியானந்தன் அவர்கள் இருந்தார். 1975 இல் அதன் தலைவராக கா.சிவத்தம்பி விளங்கினார் என்றால் மிகையாகாது. வித்தியானந்தன் அவர்கள் 1957 ஆம் ஆண்டு கலைக்கழகத் தலைவராக இருந்த காலப்பகுதிக்குள் கூத்தைப் பேணவும் அது பிறந்த இடத்திலேயே (ஊர்களில்) செல்வாக்குப் பெறவும், நகர்ப்புற மக்களின் செல்வாக்குப் பெறவும் உறுதுணையாக இருந்தார்.

சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் கூத்து செம்மையாக்கத்தின் மூலம் கூத்தை மக்கள் கலையாக மக்களிடத்தே தக்க வைத்தக்கொள்வதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டார் எனலாம்.

எமது சுதேசிய கலைகளுக்குள் ஒரு தமிழ்த்தேசிய நாடக வடிவத்தினை உருவாக்கும் நோக்கோடு ஈழத்தவர்களின் கூத்துக்களை குறிப்பாக மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி கூத்துக்களை அடிப்படையாக வைத்து சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் தனது சிந்தனைக்கேற்ப கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழக மாணாக்கரைக்கொண்டு வடமோடியான கர்ணன் போர் (1962) தென்மோடியான நொண்டி(1963) வடமோடியான இராவணேசன்(1964) வடமோடியான வாலிவதை (1967 - 1968 ) போன்ற கூத்துக்களை பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு இடங்களிலும் மத்தியதர வர்க்கத்தினருக்காக செம்மையாக்கம் செய்து தயாரித்ததோடு கற்றோரின் மதிப்பையும் கௌரவத்தையும் பெறச்செய்தார். எந்தவொரு விடயத்தையும் முன்னின்று முதன் முதலாக செய்வதென்பது இலகுவான காரியமல்ல என்பதை நாமனைவரும் முதற்கண் விளங்கிக்கொள்ள வேண்டும். ஈழத்துத் தமிழ் அரங்கப் பரப்பில் சுமார் இரண்டு நூற்றாண்டு காலமாக ஆடப்பட்டு வரும் பாரம்பரியக் கூத்துக்கலையை செம்மையாக்கம் செய்ததென்பது மிகப்பெரிய வெற்றி என்றே கூற வேண்டும். ஈழத்தமிழருக்குரிய தனித்துவமான கலை மரபு ஒன்றை வளர்த்தெடுப்பதற்கு வித்தியானந்தனின் பங்கும் பணியும் அளப்பெரியதாகவிருந்தது.

தென்மோடிக்கூத்துப் பனுவலான அலங்காரரூபன் 1962 ஆம் ஆண்டிலும் மன்னாரில் ஏட்டில் இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டிறிக்கு எம்பரத்தோர் (1964), மூவிராசாக்கள்(1966), ஞானசௌந்தரி(1967) போன்ற கூத்துப் பனுவல்களைப் பதிப்பித்ததுடன் கூத்து சார்ந்த ஆய்வுக்கட்டுரைகளையும், கூத்துப்போட்டிகளையும் நடத்தி பிரதேசக்கூத்துக்கள் வளரப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் முன்னோடியாக இருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் சிலாபத்திலிருந்த வாளபிமன் கூத்தினையும், மார்க்கண்டன் கூத்தினையும் 1963 இல் அச்சேற்றியது. இவ்விரு கூத்துக்களையும் தொகுத்தவராக கா.சிவத்தம்பி (1932-2011) விளங்குகின்றார். புலவர் மரியாம்பிள்ளை பாடிய விசயமனோகரன் நாடகத்தை மு.வி.ஆசிர்வாதம் 1968 இல் வெளியிட்டார்.

1964, 1966, 1969, 1970 ஆம் ஆண்டுகளில் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் அண்ணாவிமார் மகாநாடுகள் நடாத்தப்பட்டன. 1969 களில் மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தின் முதற்பணியாக கூத்துப் பிரதிகள் வெளிவருவது அன்று வரவேற்கத்தக்கதாக இருந்தது. அதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

மன்னாரில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.தேவநேசன் நேசையாவுக்கு அப்பகுதியிலுள்ள நாடகங்கள் பலவற்றை நேரில் பார்வையிடவும் மேடையேற்றவும் மற்றும் அச்சிட்டு வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் கிடைத்தது அப் பணிகளுக்கு துணையாகவும் ஆலோசகராகவும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் இருந்தார்.

அனுவுருத்திர நாடகத்துக்கு பதிப்பாசிரியராக பண்டிதர் வி.சீ.கந்தையா பணியாற்றுவது தனிச்சிறப்பை அளிக்கின்றதென்றும் இத்தொண்டுக்கு மிகப்பொருத்தமானவர் அவரே என்றும் அவரது நூல்களாகிய மட்டக்களப்புத்தமிழகம், கண்ணகி வழக்குரை என்பன அவரின் தகைமைக்குச் சான்று பகருகின்றன என்றும் அனுவுருத்திர நாடக மதிப்புரையில் வீ.சி.கந்தையா பற்றி, பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் சு.வித்தியானந்தன் கலைக்கழக தலைவராகயிருந்த காலத்திலேயே நடந்தேறியது என்பதை மனங்கொள்ள வேண்டும்.

வித்தியானந்தன் தயாரித்த படைப்புகள் பொருவாரியாக சாதாரண மக்கள் மத்தியில் வெற்றிபெறவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்த போதும் ஊர் ஊராகச் சென்று அவதானித்து ஊக்கம் கொடுத்து கூத்துக்கலை புத்துயிர் பெறுவதற்காக உழைத்தது என்பதை பாரிய வெற்றியாகவே கொள்ளல் வேண்டும். அன்றைய காலப்பகுதியில் (1950-1960) தமிழரின் சுதேசியத்தை எவரும் வெளிப்படுத்த முன்வராத போது முதன்முதலாக கூத்து சார்ந்து பல பணிகளைச் செய்து தமிழரின் சுதேசியத்தை வெளிக்கொணர்ந்த பெருமை வித்தியானந்தன் அவர்களையே சாரும். கூத்து செம்மையாக்கம் மூலம் பாரம்பரியக் கூத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக பாரியளவிலான முயற்சிகளை மேற்க்கொண்டார் என்பதை நாமனைவரும் முதற்கண் விளங்கிக்கொள்ள வேண்டும்.

வித்தியானந்தன் தயரித்த கூத்துக்களில் நடித்தவரான பேராசிரியர் சின்னையா மௌனகுரு முதன் முதலில் சமூக உள்ளடக்கத்தினை புகுத்தி சமூகப் பிரச்சினைகளை வித்தியானந்தனின் பாணியில் சங்காரம (1968) எனும் நாடகமாக தயாரித்திருந்தார். 1968-1970 காலப்பகுதிக்குள் புதிய கருத்துக்களை அடித்தளமாகக்கொண்டு பல தயாரிப்புக்கள் நிகழ்ந்ததையும் மறந்துவிடலாகாது.


N.K.ரகுநாதனின் கந்தன் கருணையானது அம்பலத்தாடிகள் குழுவினரால் காத்தான்கூத்துப் பாணியில் நாடகமாக்கப்பட்டது.அன்றைய மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் நிர்வாக தர்மகர்த்தாக்களுக்கு கந்தன் கருணை நாடகவாக்கத்தின் ஊடாக பலத்த எதிர்ப்பை திடப்படுத்தினர். கந்தன் கருனை நாடகமானது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கூட்டு முயற்சியினாலேயே மேடையேற்றப்பட்டாலும் இந்நாடகவுருவாக்கத்துக்கு(அளிக்கை) மூலகாரணமாக செயற்பட்டவர் இளைய பத்மநாதன் ஆவார். 1969 இல் முருகையனின் மேடைக்கவிதை நாடகமான கோபுரவாசல் அளிக்கையும் அன்றைய சமகால பிரச்சினைகளை வெளிப்படுத்தியதாக அமைந்தது.

**தொடர்ச்சி அடுத்த இதழில் ....**

**உண்மையான வாசகன்; வாசிப்பதை முடிப்பதே இல்லை!**
**-ஆஸ்கார் வைல்ட்-**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல




http;//www.lankamirrors.lk

/lankamirrors.lk

# சமூகங்களின் ஒன்றிணைவின் சங்கமம்

விதியினை மாற்றும் விதி செய்வோம்

www.lankamirrors.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org